# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி04 வியாழக்கிழமை(20-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 227


# கப்பல் கப்டனைத் தடுத்து வைத்து மூன்று மணி நேரம் விசாரணை!

## சென்னை பயணமாகவிருந்த சமயம் விமான நிலையத்தில் நேற்று சம்பவம்

கொழும்பு, ஒகஸ்ட் 20

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்து இலங்கை விமானப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்' கப்பலின் கப்டனும், உதவிக் கப்டனும் நேற்று கடற்படை அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்ட பின்னர் இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டனர்.**

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டுக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்த 17 இந்திய மாலுமிகளும் நேற்று இந்தியா செல்வதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அதன்படி பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து பிற்பகல் 2-30 மணிக்குப் புறப்படவிருந்த இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தில் இவர்கள் ஏற்றப்பட்டனர்.

விமானம் புறப்படவிருந்த சமயம் அங்கு வந்த கடற்படை அதிகாரிகள் கப்டன் வி. என். காக்ரேயையும், உதவி கப்டன் ரமேஸ்சிங்கையும் விமானத்தில் இருந்து இறக்கி அழைத்துச் சென்றனர்.

இரு மாலுமிகளும் விமானத்திலிருந்து இறக்கப்பட்டதும் ஏனைய 15 மாலுமிகளும் சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

விமானத்திலிருந்து இறக்கப்பட்ட இரு மாலுமிகளிடமும் விடுதலைப் புலிகளுடன் உள்ள தொடர்புகள் குறித்து மூன்று மணி நேரம் விசாரிக்கப்பட்டதுடன் அவர்களது வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் பிற்பகல் 4-35 மணிக்கு சென்னைக்குப் புறப்பட இருந்த எயார் லங்கா விமானத்தில் இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் கடை அடைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 20

யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து பெறுமதி மிக்க பல பொருள்களுடன் வந்தபொழுது முல்லைத்தீவுக் கடலில் வைத்து 'பிரின்ஸஸ் காஷ்' என்ற கப்பல் விமானப்படையினரால் குண்டு வீசி அழிக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும் —

இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட தமது பொருள்களை இழந்த குடாநாட்டு வர்த்தகர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் — நேற்று யாழ். நகரில் கடையடைப்பு நடத்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எச்சரிக்கை மணியால் நாடாளுமன்றில் பரபரப்பு!

கொழும்பு, ஒக. 20

நாடாளுமன்றக் கட்டடத்தில் தீ எச்சரிப்பு அபாய மணி நேற்று பிற்பகல் திடீரென ஒலித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பிற்பகல் 2-30 மணியளவில் எச்சரிக்கை மணி ஒலித்ததைத் தொடர்ந்து நாடாளுமன்ற ஊழியர்கள் அனைவரும் கட்டடத்தை விட்டு துரிதமாக வெளியேறினர்.

ஆனால் நாடாளுமன்றக் கட்டடத்தின் எப்பகுதியிலும்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் நிலைகளை அழிக்க கிழக்கில் இராணுவ நடவடிக்கை

கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை அழிப்பதற்காக ''தசபல'' இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் இணைந்து போரதீவு, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, மண்டூர் ஆகிய இடங்களில் இருந்து ஒரே சமயத்தில் முன்னேறி இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, முனைக்காடு, பழுகாமம் ஆகிய இடங்களில் உள்ள புலிகளின் நிலைகளை அழிப்பதே இந்நடவடிக்கையின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மேலும் ஆயிரம் பட்டதாரிகளுக்கு இவ்வருட இறுதிக்குள் நியமனம்

### வடக்கு - கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 20

வடக்கு — கிழக்கில் மேலும் ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் டிசெம்பர் மாதத்துக்குள் அந்த நியமனங்கள் வழங்கப்படும்.

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா மேற்கண்ட தகவலை உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் உதயன் செய்தியாளர் சந்தித்த சமயம் அவர் இதனைக் கூறினார்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு—கிழக்கில் நாலாயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க நிதியும் உண்டு.

முதல்கட்டமாக ஆயிரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

வல்வினை வேரறுக்க தேரேறிவரும் நல்லூர் முருகனுக்கு அரோகரா!



## நல்லைகந்தன் தேர் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 20

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி தொடர்ந்து கொடித்தம்பப் பூசை இடம்பெற்று, ஆறுமுகப்பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராய்த் தேருக்கு எழுந்தருளுவார்.

நல்லைக் கந்தனின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளை வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை செய்துள்ளது.

நயினாதீவில் இருந்து ஆண்டு தோறும் நடத்தப்பட்டுவரும் வீதி பஜனை இம்முறையும் வழமை போல் இன்று காலை ஆலயத்தை வந்தடையும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ரூபவாஹினியில் தேர் உற்சவம்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மற்றும் கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகியவற்றின் தேர்த்திருவிழாக்களை இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று ஒளி பரப்பவுள்ளது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு நாடு முழுவதிலும் உள்ள இந்துக்கள் இந்த விசேட நிகழ்ச்சியினைத் தொலைக்காட்சி மூலம் கண்டு கொள்ளலாம் என ரூபவாஹினிக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## பரீட்சார்த்தமின்விநியோகம்:

## பொது மக்களுக்கு மின்சாரசபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 20

யாழ். குடாநாட்டுக்கு 24 மணி நேர மின்சாரம் வழங்குவதற்கு முன்னோடியாக காங்கேசன்துறையிலிருந்து வலிகாமம் பகுதி முழுவதற்கும் பரீட்சார்த்தமாக மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

இந்த மின்சாரம் உயர் அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் மார்க்கங்களில் செலுத்தப்பட்டு பரீட்சிக்கப்படவுள்ளதால் இன்று முதல் இந்த மின்மார்க்கங்களை தீண்டுவதனைத் தவிர்த்துக் கொள்ளும்படி பொது மக்களை இலங்கை மின்சார சபையினர் கேட்டுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

புதிய உயர் கல்லூரியில் கற்று பரீட்சை எடுத்த G.A.Q.98 வெளிவாரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் 21-08-98 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு கல்லூரிக்கு தவறாது சமுகந்தரவும்.

புதிய உயர் கல்லூரி, —நிர்வாகி.
யாழ்ப்பாணம். (58514)

## புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல்

சங்கானை கூடத்து

### மனோன்மணி அம்பாள்

### தேவஸ்தான வழிபடுவோர் சபை அங்கத்தவர் உறுப்புரிமை பெறுதல்

மேற்படி ஆலய பரிபாலனசபைப் பொதுக் கூட்டம் அதி விரைவில் கூட்டப்படவிருப்பதால் 18 வயதுக்கு மேற்பட்ட சங்கானைப் பட்டின 1 ஆம், 7ஆம் வட்டாரங்களில் தொடர்ந்து நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து அங்கத்துவம் கோரப்படுகின்றது. எனவே 01-09-98 இற்கு முன்பு மேற்படி ஆலய தனாதிகாரியிடம் ரூபா 100/- ஐச் செலுத்தி அங்கத்துவப் படிவத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கு. சண்முகரத்தினம்
தனாதிகாரி

ஆலயபரிபாலன சபை
சங்கானை. (58521)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சரோஜினிதேவி குலநாயகம்

யாழ். மாநகர சபையின் கணக்குப் பகுதியில்
பிரதம எழுதுநராகப் பணியாற்றும்

**வே. குலநாயகம்**
அவர்களின் அன்புத் துணைவி திருமதி சரோஜினிதேவியின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் குழந்தைகளையும் ஆருயிர்க் கேள்வனையும்
துன்பக் கடலினிலே ஆழ்த்திவிட்டு— எங்குற்றாய்?
என்றே அரற்றும் இனியவர்கள் நெஞ்சங்கள்
என்றுதான் ஆறும் இனி?

யாழ். மாநகர ஆணையாளரும்,
பணியாளர்களும்.

(58505)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதி தம்பிஐயா

வெல்லன் கரவெட்டியை பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி தம்பிஐயா 19-8-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பிஐயாவின் மனைவியும் நேசமணி, திருமதி ஞானமணி அருணகிரிநாதன், கணேசமூர்த்தி, குணசிங்கம், பரந்தாமன் ஆகியோரின் அன்புத்தாயாரும், அருணகிரிநாதன், விமலாதேவி, றோகினி, சற்குணதேவி ஆகியோரின் மாமியாரும், அமரர் இளையதம்பி, சபாபதி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20-8-98) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நேசமணி
(மகள்)

கத்தாப்படி ஒழுங்கை,
வைரவர், முருகன் கோயிலடி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (58517)

### திருமதி அட்சயன் சிவகுமாரி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்தவருமாகிய அட்சயன் சிவகுமாரி 15.8.98 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் சங்கரலிங்கம்-யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும், அட்சயனின் அன்பு மனைவியும் எட்வேட் சண்முகம், கிறேஸ் தவமணி ஆகியோரின் பாசமிக்க மருமகளும் வித்தியா, அயனா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

இவரது நல்லடக்க ஆராதனை வெள்ளிக்கிழமை (21.8.98) அன்று ஜேர்மனியில் நடைபெறும்.

குறிப்பு:- அன்னாரது நினைவாக ஏழாலை மத்தி திரு திருமதி எட்வேட் சண்முகம் அவர்களது இல்லத்தில் (21.8.98) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நினைவு ஆராதனை நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
திரு. திருமதி எட்வேட் சண்முகம்

ஏழாலை மத்தி,
சுன்னாகம். (58516)

## சமய சந்நிதியில்

பருத்தித்துறை, ஒக. 20
புலோலி தெற்கு காந்தியூர் வற்றாப்பளை அம்மன் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் எதிர் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-118)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 20
அராலி மேற்கு நொச்சியம்பதி கோட்டைக்காடு அருள்மிகு ஸ்ரீமுத்துவிநாயர் ஆலய தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமையும், மறு நாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-ரி)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை சிவஞானம் பாலமுரளி வழங்கும் "முருகன் திருவிளையாடல்" என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம் பெறும். இந்நிகழ்வுக்கான அறிமுக வுரையை ஆசிரியர் சி. சிவலோகன் நிகழ்த்துவார். (ஐ-173)

## கட்டட கூரை

சாவகச்சேரி நகரசபையின் அபிவிருத்தி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் சாவகச்சேரி பஸ் நிலையக் கட்டடத்துக்கு வர்ணம் பூசப்பட்டுள்ளது.

எனினும் மழைகாலம் ஆரம்பமாகியுள்ள வேளையில் பஸ் நிலையக் கூரைகள் திருத்தப் படாமல் இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (இ-8-117)


## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இறுதி வாரமாக
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த
**முதல் மரியாதை**
25-08-98 முதல்
ரஜனி, மீனா
சரத்பாபு நடித்த
**முத்து**
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4560)
(சி/4574)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று
விஜய், சுவலட்சுமி,
சார்லி, சங்கவி நடித்த
**நிலாவே வா**
(புதிய வெளியீடு)
அடுத்த வெளியீடு
அஜித்குமார், கார்த்திக்
ரோஜா, மணிவண்ணன்
உன்னிடத்தில்
என்னைக் கொடுத்தேன்
(புத்தம் புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223
(58486)

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்
2 ஆவது வெற்றி வாரமாக
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த
**பாட்ஷா**
திரைப்படக் காட்டுத்தா
[illegible]
காட்சிகள்:- 10-30, 2-30
(58493)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா கனகரத்தினம் (J. P)

(இளைப்பாறிய PWD ஓவசியர் - மஸ்கேலியா)

சங்கானை "நிம்மதி" தேவாலய வீதியைச் சேர்ந்த பொ. கனகரத்தினம் (J. P) அவர்கள் 19.08.1998 அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஞானரத்தினம் அவர்களின் அன்பு மிகு கணவரும், பத்மராஜன் [உயர் அதிகாரி, களனிவலி பெருந்தோட்டம், டிக்கோயா], பத்மராணி, ரவீந்திரன் (UK) Dr. லோ. குணரதி (UK) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் இந்திரா, சிவன்நேசன் (முகாமையாளர் Koolair மின்நிலையம் காங்கேசன்துறை, இளைப்பாறிய பொறியியலாளர்- இலங்கை மின்சாரசபை), அம்பாளிகை(UK), லோகேந்திரா (பொறியியலாளர் UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சிவானி கருணாகரன் (இலங்கை மின்சார சபை- யாழ்ப்பாணம்), திருமதி சிவாஜினி கருணாகரன் (UK), -சிவாஞ்ஜன் (பௌதிக விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவாஞ்சலி(ஆசிரியை பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி), இராஜயோகினி, ரஜீவ், சஞ்சீவ், சுஜித்தா, UK ஐச் சேர்ந்தவர்களான சஞ்ஜே, சியாமா, டோன்மீரா, ஜேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெனுசனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-08-98 இன்று பி.ப 2.30 மணிக்கு (புதிய நேரம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சிவன்நேசன்
(மருமகன்)

"நிம்மதி"
சங்கானை. (58507)

### திருமதி முருகேசு நாகம்மா

திருமதி முருகேசு நாகம்மா 18-08-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், நடராசா (முரசுமோட்டை), கந்தசாமி (இளைப்பாறிய குடியேற்ற அதிகாரி), சுப்பிரமணியம் (இளைப்பாறிய பிரதம லிகிதர்), பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாணிக்கவாசகர் (Senior Quantity Surveyor, Oman) காலஞ்சென்ற யோகமலர், உதயநாகேஸ்வரி, அனந்தேஸ்வரன் (அதிபர், கம்பர்மலை அ. த. க. வித்தியாலயம்), மதனமோகன் (Electrical Draughtsman Oman) காலஞ் சென்ற மண்டலேஸ்வரன், முரளீதரன் (ஆசிரியர், ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரி புத்தூர்), கௌரிசங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராணி (கனடா), நாகேந்திரராசா (நிதி உதவியாளர், பிரதேச செயலகம், கோப்பாய்), சிவஞானம் (ஞானி), நாகலட்சுமிதேவி (ஆசிரியை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்,) வனிதா (ஓமான்), யசோதா (ஆசிரியை, கோப்பாய் மகா வித்தியாலயம்) இன்பரதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி மேனகாசுதன் (கனடா), ஜானகா (கனடா), டினேஸ் (கனடா), ராஜமுகுந்தன், வைகுந்ததீபன், ஜெயமயூரன், சிவசங்கர், ஷாலினி, உதயசங்கர், தனுஷ்கா, பிரியங்கா, ரமனேஸ், ஜனனி (ஓமான்), மதுரிக்கா, பிருந்திக்கா, முகேஷ் (கனடா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.08.98 காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் ஆலங்கட்டை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மு. அனந்தேஸ்வரன்
(மகன்)

"உதய வாசா"
விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய். (C/4610)

### வீ. சி. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஓவசியர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீ. சி. சுப்பிரமணியம் அவர்கள் 18-8-98 இல் காலமானார்.

இவர் கைதடி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா -வள்ளிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி ம. தவமணியின் (ஆசிரியை) வளர்ப்புத் தந்தையும், சு. தட்சணாமூர்த்தியின் (கமநல சேவை நிலையம் கைதடி) அன்புத் தந்தையும், திருமதி த. சந்திரமதியின் (ஆசிரியை, யாழ். கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வீ. சி. வீரசிங்கம் (கமநல சேவை நிலையம்), காலஞ்சென்ற வீ. சி. சந்திரசேகரம் (பொலீஸ் உத்தியோகத்தர்), வீ. சி. வேலாயுதர் (ஆசிரியர் யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-8-1998இல் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சு. தட்சணாமூர்த்தி
(மகன்)

கைதடி தெற்கு,
கைதடி. (58519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வைப் பகுதிக்கான மின் தடைப்பட்டது

வல்வெட்டித்துறைப் பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக தடைப்பட்டுள்ளது.

இப் பகுதிக்கான மின்சார விநியோகத்துக்கென வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதாலேயே மின்விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையும் மின் தடையினால் இருளில் மூழ்கியுள்ளது.

(ஐ-173)

---

நல்லூர்க் கந்தனின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வழமை போல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**சித்திரகலா படப்பிடிப்பாளர்**

இல. 3, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர்.

(58483)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 – 07 – 1934

உதிர்வு 20 – 08 – 1990

**மனுவல் டோமினிக்** (வாஸ்)

ஆண்டெட்டு ஓடியதோ ஐயா!
ஆனாலும் எம் கவலை ஓடாது ஐயா!
சீர் பெற்ற உம்பிள்ளைகள் திறன்பட ஐயா!
நீர்பட்ட பாடுகள்தான் எத்தனை ஐயா!

பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 41, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(58480)

---

## 2 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



மலர்வு 22 – 07 – 1981

உதிர்வு 11 – 09 – 1996

செல்வி

## இரத்தின பரராஜசிங்கம் தர்ஷியா

(10 ஆம் ஆண்டு மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி)

திதி: 20 - 08 - 1998

அன்பு மகளே பவா! அன்பை ஊட்டி வளர்த்த அன்னையை மறந்தாயோ? அன்பு காட்டி அரவணைத்த பெரியம்மா, மாமா, மாமி, அண்ணா, அண்ணி, அன்ரிமாரை மறந்தாயோ? ஊனாக உயிராக ஒன்றாயிருந்த உடன் பிறந்த இருவரையும் மறந்தாயோ? உன் கழுத்தில் வாழ்த்து மாலை விழும் நேரத்தில் மரணமாலை போட வைத்தாயே? உன் புன் சிரிப்பும், உன் பேச்சும் பார்த்து ஆண்டு இரண்டாச்சே! எம் வாழ்நாளில் இரண்டான்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவு எமை விட்டு அகலாது அம்மா அகலாது!

உமது ஆத்மா சாந்தியடைய அனுதினமும் இறைவனை வேண்டி நிற்கும்:

அன்புஅம்மா, அண்ணாமார், தம்பி, பெரியம்மா,
சின்னமாமா, மாமி, பெரியமாமி, மச்சான்
மச்சாள்மார், பெரியண்ணா, அண்ணி,
மருமகன், மருமகள்.

(58471)

---

## பிரிவுபசாரம்

கொழும்புத்துறை, ஓக. 20

யாழ். மரியன்னைபேராலய உதவிப் பங்குத் தந்தையாகவும், இளைஞர் கழக இயக்குநராகவும் பணி புரிந்து வன்னி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அருட் திரு. எஸ். ஆனந்தகுமார் அடிகளாருக்கு அண்மையில் பங்குத் தந்தை ஏ. கி. கிறிஸ்ரோபர் அடிகள் தலைமையில் பிரிவுபசார வைபவம் நடைபெற்றது. (இ-30)

## விலைகள் திடீர் உயர்வு

தென்மராட்சி, ஓக. 20

தென்மராட்சிப் பகுதியில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. அரிசி, மா, சீனி போன்றவற்றின் விலைகளே அதிகரித்துள்ளன.

32 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிலோ சீனி நேற்று முன்தினம் ரூபா 42 ஆகவும், 19 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிலோ மா 27 ரூபாவாகவும், 24 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிலோ அரிசி 32 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

சில சில்லறை வியாபார நிலையங்களில் அரிசி, மா, சீனி ஆகிய பொருள்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-117)

## சிறுவர் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கச்சாய் வெள்ளாம் போக்கட்டி பாலர் பாடசாலைச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 12.00 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் பாடசாலைப் பெற்றோர்ஆசிரியர் சங்கத் தலைவர் வே. சுரேந்திரன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினர்களாகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் த. கந்தையா ஆகியோரும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவும் கலந்து கொள்வர். (ஐ-117)

---

## கருத்தரங்கு

ஆதிசங்கரர் அருளிய திரிபஞ்சாங்க யோகமும், பதஞ்சலி முனிவர் அஸ்டாங்க யோக தத்துவமும் இணைந்த

**அபரோட்ச அநுபூதி**

என்னும் பொருளில்

அத்துவித தத்துவ விரிவுரையாளர்

வைத்திய கலாநிதி

**வ. சின்னப்பு**

கருத்துரை வழங்குவார்

நாள்: 21 - 08 - 98 வெள்ளிக்கிழமை (நாளை)
நேரம்: காலை 9. 30 தொடக்கம்
மாலை 3. 30 வரை
இடம்: செல்வி சி. பொன்னம்பலம்,
'கடவுள் சந்நிதி',
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(சி/4608)

---

## நல்லூர்- கோப்பாய் லயன்ஸ் கழகங்கள்

மாவட்ட தலைவர் (நீரிழிவு-சுகாதாரம்) 98/99 ஏற்பாட்டில்
மருத்துவபீட மாணவர்களுடன் இணைந்து நடத்தும்

## இலவச மருத்துவ பரிசோதனை வைத்திய ஆலோசனை முகாம்

பருத்தித்துறை வீதி,
நல்லூர் பழைய பொலீஸ் நிலையம் முன்பாக
திகதி: 18 . 08 . 98 முதல்
19, 20, 21 22 . 08 . 98 வரை.
காலை 9.00 - 12.00
பி.பகல் 3.00 - 5.00 வரை

அனைவரையும் பங்குபற்றி பயன்பெற வேண்டுகிறோம்.

லயன் பா. தவபாலன்
தலைவர் லயன்ஸ் கழகம்,
நல்லூர்.

லயன் க. செல்வரட்ணம்
தலைவர் லயன்ஸ் கழகம்,
கோப்பாய்.

விளம்பர உதவி:

**எஸ். எம். பெர்னாண்டோ**

இல. 580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/4583)

---


ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் ஆவணி மாதம் 7 ஆம் நாள் (23 - 08 - 98) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-40 முதல் 3-45 மணிவரை உள்ள பூர நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய விருச்சிக லக்கின சுபமங்கள முகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**சபேசன்**
(பொறியியலாளர் U. K)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**யசோதா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு
இங்கிலாந்தில் ஜோர்ஜ் V அவனியூ பின்னரில் அமைந்துள்ள நோவகில் உயர்கல்லூரி மண்டபத்தில்
திருமணம்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி அ. சுப்பிரமணியம்
சந்தை வீதி,
கொடிகாமம்.

திருமதி சௌ. குலசேகரம்
(துணுக்காய்)
23, ஸ்ரான்லி வீதி,
கறோ தெற்கு, கறோ,
இங்கிலாந்து.

இரு வீட்டார் அழைப்பு

(சி/4597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள P X 150 வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு; நியூசயன்ஸ்ஹோல், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

[58477]

புதிதாக வீடியோப்படப் பிரதிகள் வாடகைக்கு விட விரும்புவோருக்கு உகந்த, நல்லநிலையில் உள்ள புத்தம் புதிய மாஸ்ரர் வீடியோப் படப்பிரதிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: மா. சிவமூர்த்தி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

[58476]

40 அடி X 20 அடி கொண்ட இரு ரியூசன் வகுப்பறைகள் நடத்திய கொட்டகை பனைமரங்களும், பனம் தூண்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. தம்பையா, இளைப்பாறிய ஆசிரியர், சிவன் இல்லம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

[சி/4607]

## கார் விற்பனைக்கு

சிரேஷ்ட தொலைத் தொடர்பு தொழில்நுட்பவியலாளரின் சொந்தப் பாவனையிலிருந்த நல்லநிலையில் உள்ள பெற்றோல்மொறிஸ் ஒக்ஸ்போட் நீலநிற8 சிறி மூவாயிரம் தொடரிலக்க இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. குணராஜா, 465, K K.S. றோட், யாழ்ப்பாணம். (துட்டாதெருச் சந்திக்கு அருகில் உள்ள மூன்றாம் ஒழுங்கையில்).

[58492]

## திருமண சேவை

சாயி மங்கள திருமண சேவை பல ஆண்டு காலமாக உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் திருமணங்களை நிறைவேற்றி முன்னோடியாக விளங்குகின்றது. உங்களுக்கு மணமகள், மணமகன் தேவைப்படின்சாதகக்குறிப்பு, குடும்ப விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். V. மகேந்திரன், 27, இராஜ சிங்கா றோட். வெள்ள வத்தை, Colombo-06.

(58367)

## 'ஒளிவட்டம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 20

எழுத்தாளர் ந. சிவபாதம் (புத்தொளி) பற்றிய 'ஒளிவட்டம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவும், பாராட்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆனைக்கோட்டை கிராம முன்னேற்றச்சங்கத்தலைவர் சட்டத்தரணி மா. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளன. யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலர் நா. வேதநாயகன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. ஸ்ரீபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள், வெளியீட்டுரையை சு. குமாரவேல் நிகழ்த்துவார்.

(ஐ–173)

## மதகு வேலை

அரியாலை, ஒக. 20

குருநகர் சவக்காலைச் சந்தியில் மிகவும் சேதமுற்ற நிலையிலிருந்த மதகின் புனரமைப்பு வேலைகள் தற்பேது பூர்த்தியடைந்து வருகின்றன.

(இ-8-17)

---

**PITUNTAPAN CALLING CENTRE**

**பிருந்தாபன்**

**தொலைபேசி அழைப்பு நிலையம்**

கிழவிதோட்டம், யார்க்கருவீதி,
கரவெட்டி கிழக்கு.

உங்களுக்குத் தேவையான உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களை 24 மணி நேரமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல. - 070-212246.

வெளிநாட்டிலிருந்து தொடர்பு கொள்ள
இல. 0094-70-212246

- உரிமையாளர்

[சி/4609]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 11 – 04 – 1959

இறப்பு 21 – 07 – 1998

திருமதி

**உதயச்சந்திரன் உதாரணி**

எங்கள் அன்புத்தாயே!
பாசத்தின் ஒளிவிளக்கே!
பண்பின் பிறப்பிடமே!
எங்கள் அன்புத் தீபமே அம்மா!
நீ இன்றும் எம் மனதைவிட்டு
அகலவில்லை அம்மா!
எங்களால் உங்களை அகலவிட
முடியவில்லை அம்மா!

தாயே உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

கணவன், மகள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(58494)

---

## 31 -ம் நாள் நினைவஞ்சலி



**மகேஸ்வரி செல்லத்துரை**

மலர்வு 24-10-1944

உதிர்வு 21-07-1998

மாதமொன்று ஆனதம்மா மாறவில்லை எம்துயரம்
தேசம்விட்டுச் சென்றவுந்தன் பிஞ்சுகளும் ஏங்குகிறார்
பாசம் வைத்த எங்களுயிர்த் தெய்வமே!
பாரினிலே இனிமேல் உமையாம் காண்போமா?

பிரிவால் துயருறும்

கணவன், மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

16/1, கனகரெட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(58498)

---

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

'பிரின்ஸஸ் காஷ்' கப்பலில் பொருள்கள் ஏற்றிப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் நலன் கருதி ஒரு நாள் கடையடைப்பு மட்டும் செய்துள்ளோம். வர்த்தக சங்கத்தின் பெயரால் யாழ். நகர வீதிகளில் எழுதப்பட்ட பதாதைகளுக்கு எமது கழகம் பொறுப்பு அல்ல.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/4611)

---

நல்லூரில் வலம் வந்து நம்மை ஆளும் வேலா!
தமிழர் துயர்துடைத்திடவே விரைந்திடுவாய் வேலா!

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப் பவுண்
நகைகளுக்கு

**அலங்கார்**

**நகைமாளிகை**

''தேவி பிளாசா பில்டிங்
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(58475)

---

## மனையியல் டிப்ளோமா பயிற்சி III

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

பயிற்சி நெறிகள்:-

★ நவீன ஆடை தயாரித்தல், பூவேலை, சமையற்கலை, கேக் ஐசிங், சிகை அலங்காரம், கோலம்.

★ பாடசாலையை விட்டு விலகியோர், சுய தொழில் வாய்ப்பைப் பெற முயற்சிப்போர் 10-09-98 இற்கு முதல் விண்ணப்பிக்குக.

★ பயிற்சிகள் இலவசம்.

பணிப்பாளர்

**மகளிர் அபிவிருத்தி நிலையம்**

இல. 7, இரட்ணம் லேன்,
கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை.

(50058)

---

## 4-வது மாத நினைவு அஞ்சலி



மண்ணில் 17 – 11 – 1914

விண்ணில் 20 – 04 – 1998

திருமதி

**நாகம்மா றெஜினா**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அம்மா! அழகின் திருவுருவே!
மாதம் நான்கு சென்றிடினும் மாறிடுமோ எனது துயர்
காதில் உங்கள் மெலிந்த குரல் கேட்குதம்மா!
'' கலங்காதே மகளே! கர்த்தர் கையிலிருப்பது
கள்ளத் தராசு அல்ல—நீதியின் தராசு '' என்றீர்கள்
மரணத்தை முன் கூட்டியே அறிந்துவிட்ட உத்தமியே!
வழமைபோல் திரும்பியோடி தனித்துவாழ
விரும்பாமல் தானோ விலை மதிக்க முடியாத
அரும் பெரும் ஆவியை என் மடி மீது விட்டீர்கள்?
பார்வை பெற்ற கையுடன் கால் முடங்கியதும்
இதற்குத் தானா தாயே?
''பார்புகழும் சுற்றங்கள்'' பல இருந்தும் என்ன?
''சீர் ஏதுமில்லா அடியேனை'' மூலைக் கல்லாய்
தேர்ந்து கொண்ட விந்தை தான் எனக்கு இன்னும்
விளங்கவில்லை தெய்வமே! வான் வீட்டை அலங்கரிப்பவளே என் வினாவுக்கு விடை தாரும் அம்மா!

அன்பு மகள்
திருமதி செ. புஷ்பராணி

கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

(58599)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன்

நல்லூர் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்




# நல்லைக் கந்தனின் தேர் உலாக் காண்பது வாழ்க்கைக்குக் கிடைக்கும் அருமருந்து


கோண்டாவிலூரா
க. தியாகராசா


கீர்த்தி நிறை மூர்த்தி உறை திருத்தலம் நல்லூர் ஆகும். கொற்றம்முன்பிருந்த காரணத்தையும் மிஞ்சி கந்தப் பெருமானின் கோயிலும், அருளூறு கோனாய், நறுந் தேனாய் முருகன் வீற்றிருப்பதே நல்லூரின் பெருமைக்குக் காரணமாகும். நல்லூர்க் கந்தனின் திருவிழாவை தேசிய விழாவாக சகலரும் போற்றுவதும், சுற்றுச்சூழல் மட்டுமல்ல வட புலத்தின் பலபாகங்களிலும் தூய்மை பேணி விரதம் அனுஷ்டிப்பதிலும் இருந்து அறியலாம்.

அழகுறு கோபுரங்களும், அணிசெய்ய மணிக்கோபுரங்களும் நெடிதுயர்ந்த மதிற் சுவரும், சூழவுள்ள கோகரணமும் தனியழகு வாய்ந்தவை, திருக்கேணியும், நந்தவனமும் பொலிவைக் கொடுப்பனவாகும். தேவலோகமோ என வியக்க வைக்கும் வகையில் அமைந்து உள்ள மண்டபங்களின் அமைப்பு கவினுறு தோற்றமானவை. அத்துடன் பக்திப் பிரவாகத்தை ஊட்டும் பரிவார மூர்த்திகளும் அமைந்துள்ளமை தனிச் சிறப்புக் கொண்டது.

நேரக் கிரமப்படி நாளும் ஆறுகாலப்பூசை நடைபெறும் திருத்தலம், வைகறையில் ஒலிக்கும் மணி ஓசையானது வெகு தொலைவுவரை 'ஓம்' எனும் மந்திர ஒலியுடன் கேட்கும் சக்தி உள்ளது. புள்ளினங்களும் ஆர்ப்ப, மணியும் ஒலிக்க புலரும் பொழுதில் உலகம் விடியும்; மனங்கள் தெளியும்; மனித வாழ்வும் உய்யும். ஆடம்பரமில்லா வேதியரின் ஒழுங்கும் தேவ முரசொலியாய் பேரிகை முழங்க தெய்வீகப் பொலிவாய் தோற்றும் புனிதமானது பூசிக்கும் எவர் மனதையும் ஈர்த்து விடும்.



விழாக்காலங்களில் நடைபெறும் பூசைகள் மிக நேர்த்தியானவை. வசந்த மண்டபப்பூசையின் போது நிரை, நிரையாய் மக்கள் இருப்பதுவும், திரைச்சீலைகள் விலகுவதும் திரு நிறை கொலுவாய் விளங்கும் கந்தப்பெருமானின் திருக்காட்சியைக் காண்பவர்களுக்கு மேனி சிலிர்க்கும்; மெய்யன்பு பெருகும்; மேன்மையும்கிடைக்கும்.

ஆலயத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களும் ஆன்மீகக் கண்ணுக்கினியனவாய், பக்திக் கருத்தைக் கவர்வனவாய் இருந்தாலும் எல்லாவற்றுக்கும் தலையாகத் திகழ்வது கந்தனின் தேரோட்டவிழாவே. சண்முகப்பெருமானின் தங்கத் தேர்ப் பவனி காண்பவர்கள் "கண்டறியாதன கண்டேன்" என்ற நாவுக்கரசரின் நிலையை அடைவர் என்பது திண்ணம்.

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி சிந்தைமகிழ கந்தனை வந்தனை செய்தால் கிருபையைப் பெறலாம். "அழுதால் உன்னைப் பெறலாமே" என மணிவாசகப் பெருமான் உள்ளம் மெழுகாய் உருகியது போல எவர் மனத்தையும் உருக்க வல்லது,


(6 ஆம் பக்கம் பார்க்க)


## மக்களுக்குரிமை ஈவாய்!

கண்ணியாற் கணையினாற் காணாமற் போவதாற்
கண்ணீரிலே துடிக்கும்
எண்ணிலா அன்பருக் கினியவே செய்யவே
இன்று நீ தேரில் வாராய்.
மண்ணிலே நல்லராய் மாண்புடன் வாழவே
மக்களுக்குரிமை ஈவாய்
நண்ணியே வேண்டுவோர் நலமெலாம் காத்திடும்
நல்லையின் கந்தவேளே!

— சிற்பி

## தேரினில் வருகின்றான்

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

தேவரின் குலம்காத்தோன் தேரினில் வருகின்றான்!
பேரெழில் காண்போம் வாராய் — தோழீ!!
(தேவ...)

அனுபல்லவி

ஆற்றினில் அள்ளுண்டான் அறுவரின் அமுதுண்டான்!
அயனரன் அறியாத அரும்பொருள் உரைசெய்தான்!!
(தேவ...)

சரணம்

தாய்கண்ட பசுக்கன்றாய் அடியவர் குதித்தாட
மதிகண்ட அலைகடலாய் அன்பர்கள் எழுந்தாட
மதுவுண்ட கருவண்டாய்த் தொண்டர்கள் சுழன்றாட
தாய்கண்ட சிறுசேயாய் மெய்யன்பர் நெகிழ்ந்தாட
(தேவ...)

மூவிரு முகத்தொளியில் முழுமதி மறைத்திடவே
கூர்மிகு வேலொளியில் கதிரொளி மயங்கிடவே
பன்னிரு அருள்விழியில் தாயன்பு தோற்றிடவே
பன்னரும் அருள்மொழியில் அமிர்தமும் தோற்றிடவே
(தேவ...)

- ச. முருகையா.


பழம் கேட்டுத் துறவேற்ற முருகையனே — உந்தன்
பதம் போற்றும் எனைக்காப்பாய் குமரையனே!

கண்டதும் மனம் கொள்ளை கொண்டு
வாங்கத் தூண்டும் ஆடை வகைகள்
மங்களம் பொங்கிடும் சேலைகளின் சோலை

ராகம்ஸ் பட்டுச் சோலை

24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/4545)

நல்லூர் உற்சவகால விற்பனையகம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்.





தங்கரதம் ஏறிவரும் தங்கவேலா! எங்கள் குறை திருமையா உமை பாலா!

நாளைய நாகரிகத்தினை இன்றே
அறிமுகம் செய்து எடுப்புறத் தைப்பவர்கள்

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(புடைவைத் தினுசுகளின் ராஜமுத்திரை! ரவுசர் தினுசுகளின் சங்கமம்!)
73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4550)



நல்லூரான் தேரோடி வருகிறது
வல்வினை பறந்தோடிப் போகிறது!


விண்ணோடும் மண்ணோடும் இல்லாத வண்ணங்களை
பட்டோடும் நூலோடும் அளிக்கிறது

மகாநதி
புடைவையகம்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி/4548) 4, நவீன சந்தை, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

நல்லூர் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்




# அருள் வழங்கும் ஞானக்குமரன் முருகனை நல்லையில் வணங்கி வாழ்வு பெறுவோம்!


சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**


நல்லைக் கந்தன் திருவருளை நினைத்து நாளும் துதிக்கும் பேறுபெற்றவர்கள் நாங்கள், எனவே பெருமானுடைய மகோற்சவ நாள்களில் அவனருள் பற்றிச் சிந்திப்போமாக;

'கலியுக வெப்பத்தினின்று உயிர்களைக் காப்பாற்றிக் கருணை பொழிய வல்லவர் முருகப் பெருமானே' என்று வியாசர் ஏனைய முனிவர்களுக்கு மொழிந்திருக்கிறார்;

முருகு என்ற அடிப்பதமே உயிர்களைக் காப்பாற்றும் கருணையுடையவன் என்ற கருத்தை வழங்குகிறது;


அந்த மூன்று எழுத்துக்களும் உகரமாகிய உயிரை அடக்கி இருப்பன; உகரம் காத்தற்றொழிலை விளக்குவது; எனவே முருகன் முக்காலமும் காப்பவன் என்ற கருத்தையே நாம் உணர முடிகிறது; அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம்; மயில் வாகனம் பிரணவ சொருபம்; திருமுகங்கள் ஞான அடக்கம்; அவன் வேலைப் போற்றினர்கள் தேவர்கள்; அந்த வேல் அவுணர் என்கின்ற அறியாமையை நீக்கித் தேவர்களாகிய அறிவைப் பிரகாசிக்கச் செய்தது.

சூரனுடைய மார்பில்பட்டவுடனே அவன் ஞானம் பெற்று சேவலும் மயிலும் ஆகிறான்; வேல் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் போக்க வல்லது;

பெருமானுடைய அங்கங்கள் அனைத்திற்கும் ஒரு போற்றி சொன்ன கச்சியப்பர் திருக்கைவேலுக்கு இருதரம் போற்றி சொல்கிறார்;

''தனித்து வழி நடக்கும்
எனதிடத்தும், ஒரு வலத்தும்
இரு புறத்தும் அருகடுத்து
இரவு பகல் துணையதாகும்''

என்று பாடி, வேல் துணையாக நிற்கும் தன்மையை அருணகிரிநாதர் விளக்கினார்;



பெருமானை மறவாதவர்க்கு ஒரு தாழ்வும் இல்லை என்பது அருணகிரி வாக்கு;

இவர் முருகனிடமிருந்து சும்மாவிருக்கின்ற சுகத்தைப் பெற்றவர்; தன் செயலற்று அவன் செயலிலே ஆயிரம், ஆயிரம் பாடல்களை அள்ளிச் சொரிந்தவர்; இவர் அலங்காரத்தில் முருகனை அழகுபடுத்தினார்;

சேந்தனைக் கந்தனைச்
''செங்கோட்டுவெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்
நூல் விரித்தோனை
விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக்
கடம்பனைக் கார்மயில்
வாகனனைச்
சாந்துணைப்போதும்
மறவாதவர்க்கு ஒரு
தாழ்வில்லையே''

செந்தமிழ் நூல் விரித்த பெருமான் முருகன். அவன் சிறந்த இலக்கணப் புலவன்; இறையனார் களவியலுக்கு உரை முடிவு கண்டவன்; தமிழ் நாட்டில் குறக்குடியில் தோன்றிய தமிழணங்கு வள்ளியம்மையாரிடம் தமிழ் கேட்க விழைந்தான். பேரினைக் கேட்டான், ஊரினைக் கேட்டான், ஊர்க்குச் செல்லும் வழியினைக் கேட்டான்; அவள் வாயிலிருந்து வெளிப்படும் தேனூறுகிளவிக்கு வாயூறி நின்றான்;

பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பையொழித்துப் பெருவாழ்வும், பேறும் கொடுக்க வல்லவன் என்பதைப் பிள்ளைத்தமிழில் அழகாகப் பாடி வைத்தனர்; பாலனாகிய முருகன் ஞானம் வழங்குந்தன்மையை அருமையாகப்பிள்ளைத்தமிழ் மொழிகிறது; இம்மைப்பேறு, மறுமைப்பேறு ஆகிய இரண்டுக்கும் அவனருளே தேவை; இவ்வுலகில் வேண்டிய வரம்


(11ஆம் பக்கம் பார்க்க)


## நல்லைக் கந்தனின் தேர்...


(ஐந்தாம் பக்கத் தொடர்)


வினைகளை அறுத்து விலங்கு மனத்தை அழித்து, மலங்களை நீக்க சரவணப் பெருமான் திருத்தேரில் ஆரோகணித்திருப்பது கண்கொள்ளாக்காட்சி; செங்கதிரோனின் ஒளிபட்டுத்தெறிக்க தேர் அசையும் அழகும்; செவ்வேளின் கொலுவும், பக்தர்களின் அரோகரா ஒலியும், நாதஸ்வர இசையும், வேதியர்களின் வேதம் ஓதும் ஓசையும், ஆரணம் ஓதும் அருமறையடியார்கள் பாமாலையும், எவரையும் கரமொட்டி, சிரம்குட்டி, கண்ணீர் மல்கி, மெய்மறந்து வணங்கச் செய்யும் வசீகர சக்தி கொண்டவை;

'தானவர் வேண்டுவதைத் தந்து இரட்சிக்கும் தயாபரனின் தேர்விழாக் காண அலை அலையாய் மக்கள் கூடுவர்; அவனைத் தேடுவர் பாடுவர்; ஆடுவர்; அருளை வேண்டுவர்; காணுமிடமெங்கும் அவன் அருளே நிறைந்திருக்கும் அரிய காட்சியைக் காண்பவர்களுக்கு வாழ்க்கைக்கு அருமருந்தும் கிடைக்கும், பிறவிப் பிணியும் தீரும்; கந்தன் தேரோட கருணை வேண்டி, சேவடியை நாடி, காவடிகள் ஒரு புறம், பாவடியார் கூட்டம் ஒருபுறம், கற்பூரக் காவடி எடுக்கும் மாதரசிகள் ஒரு புறம், அங்கப்பிரதிஷ்டை செய்யும் ஆடவர் ஒரு புறம், அடி அழித்து அருளை வேண்டும் ஆரணங்குகள் ஒரு புறம்; வெள்ளமென மக்கள் புடைசூழ தொங்கும் மணிகள் ஒலிக்க தங்கத் தேர்ப்பவனியைக் காணக் கண் கோடி வேண்டும்;

''நாள் என்செய்யும்; வினை தான் என் செய்யும்; எனை நாடி வந்த கோள் என் செய்யும்; கொடுங் கூற்றும் என் செய்யும்; குமரேசனிரு தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே'' என்று பாடுவதற்குத் தோன்றும்;

அவன் கழலை நாடின் நாளும், கோளும் எதுவும் ஒன்றும் இடர்தராது; குருவாய் அருளும் நல்லூர்க் கந்தனின் கருணை சொல்லுந்தரமன்று; நண்ணினார்க்கு இனிய நாதன் நல்லருள் புரிவான்; நாளும் காப்பான் நாடிச் செல்வீர் நலம் பெறுவீர்! ★


நல்லை முருகனின் தேர் வருகிறது
அருள் பேரொளி வீசி வருகிறது!

★ சகலவிதமான எசன்ஸ் வகைகள் ★ குளிர்பானம், கேக், பிஸ்கட், இனிப்பு, பீடா தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் ★ வாசனைத் திரவியங்கள் ★ ஆயுர்வேத மருந்து தயாரிப்பு மூலிகை வகைகள் ★ அச்சகத் தேவைக்குரிய பேப்பர், மை போன்ற பொருள்கள்

இன்னும் என்ன வேண்டும்! அத்தனைக்கும்
தரம் நாடுவோர் கூடும் இடம்

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்

104 (298), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/[illegible])



கந்தபுராணக் கருப்பொருளே குகனே
நொந்த தமிழன் குறை தீருமையா!



மங்கிடும் பார்வை கொண்ட
உங்கள் விழிகள்
பொங்கிடும் பார்வை பெற
விழி உங்களிடம்
அதன் ஒளி எங்களிடம்
என அழைப்பவர்கள்.

எரிக்கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4544)



தேரேறி வருகின்ற தேவாதி தேவனே
தேவர் சிறை மீட்டவனே வாராய்!



புடைவைத் தினுசுகளின் கடல்

சீமாட்டி


புடைவைக் கடல்

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4542)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

நல்லூர் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்




# நல்லூர்த் தேரைத் தரிசித்தால் பக்தனுக்கு தல யாத்திரை செய்யவேண்டிய தேவையில்லை

''நல்லூரில் தேரடியில் நான் கண்ட சிவயோகம் சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டி விடும்' என்று யோகர் சுவாமிகள் தமது குருநாதன் செல்லப்பரை விளித்துப் பாடியுள்ளார்.

ஈழத்திலுள்ள எல்லா ஆலயங்களையும் விட நல்



செல்லப்பா சுவாமிகள்

லூரான் தேரடி மிகவும் சிறப்பு வாய்ந்தது. நல்லூர்க் கோவிலின் கிழக்குப் பக்கத்தில் இருக்கும் தேரடியில் எத்தனையோ மகான்கள் தங்கள் ஞானச்சுவடுகளைப்பதித்துள்ளார்கள். நல்லூரான் தேரடி, கடையிற் சுவாமிகள், செல்லப்பா, யோகர் சுவாமிகள் முதல் ஞானிகள், சித்தர்கள், யோகியர் தங்கள் ஞானத் தாகத்தைத் தீர்க்க தேர்ந்தெடுத்த புண்ணிய பூமி.

முதற் செய்தி

இந்தியாவில் நீதிவானாக இருந்த கடையிற் சுவாமிகள் ஒரு கைதிக்கு தூக்குத் தண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போது சுவாமிகட்கு மறித்துணர்வு தோன்றி விட்டது. ''இவனார் நானார். இவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்க நானார்'' என்று விசாரணை எழுந்தது. இதன் விளைவால் தன் உத்தியோகத்திற்கு முழுக்கு போட்டார். தன்னையுணர முற்பட்டு சீவன் முத்தராகத் திகழ்ந்தார்.

சுவாமியின் அடியாரான

**ம. சிவயோகசுந்தரம்**

யாழ்பபாணத்துச் செட்டியார் ஒருவர் நல்லூர்க் கந்தனை வேண்டி, தன் குருவை தனக்குத் தந்து விட வேண்டுமென நெக்குருகித் தொழுதார். அவர் நல்லூரானை வேண்டிய பயன் கிடைத்தது. கடையிற் சுவாமிகள் தன் இல்லத்திற்கே வந்து இருந்ததைக் கண்டு வியந்து சுவாமிகட்கு திருவமுது செய்வித்து அவர் தாள் வணங்கி நின்றார். இதுவே கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாண மண்ணில் கால் பதித்த முதற் செய்தி.

கடையிற் சுவாமிகள் சகல சம்பிரதாயங்களுக்கும், சங்கற்பட்டவிகற்பங்களுக்கும் அப்பாற் பட்டவர். அனுசரணையிலுள்ள விதி விலக்குகளுக்கு எல்லாம் அவர் தாமே விதி விலக்காகத் திகழ்ந்தார். மது, மாமிசம் போன்றவற்றையும் விலக்காது ஏற்பார். உருக்கிய மெழுகையும் குடித்தார். கடையிற்சுவாமிகள் பெரிய கடையிலும், நல்லூர்த் தேரடிப்பக்கமாகவும் தான் அநன் நடனம் செய்தார். இதனால் சுவாமிகளது திருவடிப் பரிசம் பெற்று அவர் தம் நடன சுகத்தையும் அனுபவித்த பெரியகடை வீதியும் நல்லூர் வீதியும் பெரும் தவப்பேறடைந்தன.

## செல்லப்ப சுவாமிகள்

கறுத்த மேனியும், கந்தைத் துணியுடனும் முட்டாளைப் போலவும ஒருவர் நல்லூர் வீதியில் வீற்றிருந்தார். சிலவேளைகளில் அவரின் அட்டகாசம் பொறுக்க முடியாதவீட்டுக்காரர்கள்கட்டிப் போட்டனர். கட்டிப் போட்ட அந்தப் பைத்தியத்தை உற்றுப் பார்த்த



யோகர் சுவாமிகள்

கடையிற்சுவாமிகள், ''பைத்தியம் முற்றி விட்டது. உடனே அவிழ்த்து விடுங்கள்'' என்று கூறினார். இது வைத்தியம் செய்ய முடியாத பைத்தியம் எனக் கருதி அவிழ்த்து விட்டனர். பைத்தியம் நேரே வந்து நல்லூர் தேர்முட்டியை தன் இருப்பிடமாக்கிக் கொண்டது.


இப் பைத்தியம் தான் யோககுருநாதனுக்கு குருவாக வாய்த்த செல்லப்ப தேசிகராவார். தேரடியில் வீற்றிருந்த செல்லப்பர் தனது விளையாட்டுக்களைக் காட்டத் தொடங்கினார். தெருவில் வருவோர் போவோரை கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசுவார். சிரித்துக்கொண்டு நல்லூரைச் சுற்றுவார். உள்ளே ஊறி வந்த ஞானப் பெருக்கு வெளியில் வரத் தொடங்கியதை அவதானித்த கடையிற்சுவாமிகள் ஒருநாள் பக்கத்தில் நின்ற கடலைக்காரியிடம் ஒரு ரூபா வாங்கி வெற்றிலையில் வைத்து செல்லப்பரிடம் கொடுத்து தலையிற் குடையைப் பிடித்து, 'ஓடடா'' என்றார். இதுவே செல்லப்பசுவாமிகளுக்கு தீட்சையாக அமைந்து ஞானோதயம் ஏற்படக் காரணமாயிருந்தது.

நல்லூரான் திருவடிக்கே தன்னை அர்ப்பணித்த செல்லப்பர் அல்லும்பகலும் தமது சித்தத்தை முருகன்பால் வைத்திருந்தார். அர்த்த சாமப் பூசை முடிந்த பின் யாருமறியாமல் அந்தரங்கமாகக் கோயில் முன்றலில் நின்றும், இருந்தும், கிடந்தும், அழுது தொழுதார்.

## யோகர் சுவாமிகள்

செல்லப்பர் ஞானோதயம் பெற்று நல்லூர் முச்சந்திக் குப்பையில் இருக்கும்போது யோக நாதன் என்ற இளைஞன் இவரைத் தரிசிக்கச் சென்றான். யோகநாதன் சற்றுச் சமீபத்தில் சென்று நின்றபோது அவர் மனதில் தோன்றிய கேள்விகளுக்கு எல்லாம் செல்லப்பரிடமிருந்து மறுமொழிகள் கிடைத்தன. சிறிது நேரத்தில் செல்லப்பர் '' ஆரடா நீ '' எனச் சீறிப்பாய்ந்தார். அன்றே யோகநாதன் செல்லப்பரின் அருளைப் பெற்றார்.


அதனைத் தமது நற்சிந்தனையில் '' ஆரடா நீ என்று அதட்டினான் அன்றே யான் பெற்றேன் அருள் '' என மனங்கசிந்து பாடியுள்ளார். தம்மைத் தொடர்ந்த யோகநாதன் தன்னைப்போலவே ஒரு சிவானுபூதிச் செல்வனாக விளங்குவார் எனச் செல்லப்பர் அறிந்தார். யோகரைப் பல சோதனைகட்கு ஆளாக்கினார். நல்லூர் தேர் முட்டியில் நாற்பது நாள்கள் கடுந்தவமாற்று



மார்க்கண்டு சுவாமிகள்

மாறு பணித்தார். நாற்பதாம் நாள் முடிந்ததும் யோகர் உணவு சமைத்துச் சாப்பிட எண்ணிச் செல்லப்பரிடம் இருந்த பானை சட்டியைக் கேட்டார். செல்லப்பர் எல்லாவற்றையும் உடைத்து 'எடடா பிச்சை' என்று துரத்தினார்.

தேரடியிலிருந்து பல்லுத் தேய்க்க முறித்த குச்சியுடன் கிழக்கு நோக்கிச் சென்ற யோகநாதன், கால் நடையாகக் கதிர்காமம் சென்று இலங்கை முழுவதும் சுற்றித்



கடையிற் சுவாமிகள்

திரிந்து பரிவ்ராசக (துறவு) வாழ்க்கையை மேற்கொண்டு நான்கு வருடங்களுக்குப் பின் யாழ்ப்பாணம் திரும்பினார்.

'' சாமி பண்ணாதே. சாமி பண்ணினால் யாழ்ப்பாணத்தார் தலைக்கு மேலே ஏறி மிதித்து விடுவார்கள '' என யோகர் சுவாமியைச் செல்லப்பர் எச்சரித்தும் உள்ளார். '' செல்லப்பன் சாமி, தம்பிரான் என்று பேர் வாங்காது விசரனாகப் பிச்சையேற்றுத் தின்றுதான் சாவான் '' என்றும் கூறியுள்ளார். செல்லப்பரின் பிதற்றல்கள் பெரும்பாலும் பரிபாஷைகளாகவே அமையும். தமது ஆசானின் பரிபாஷையை அறியாத பாவலரும், நாவலரும் பதறியே போவார் என யோகர் சுவாமிகள் பாடியுள்ளார்கள்.

செல்லப்பர் கடும் சுகவீனம் அடைந்து இருப்பதை அறிந்த யோகர் சுவாமிகள் செல்லப்பரின் கொட்டிலிலிருந்த படலையைத் திறக்க ''யாரடா படலையில் பாரடா வெளியில்'' என்று கர்ச்சித்தார். அவ்வளவு தான் யோகர்சுவாமிகள் படலையைச் சாத்தி விட்டு வந்துவிட்டார். பிறகு அவர் அந்தப் பக்கம் போகவில்லை. செல்லப்பரின் சமாதியின் பின் யோகர் சுவாமிகள் அல்லும் பகலும் தமது குருவின் நினைவாகவே இருந்தார். ஆசான் நல்லூர் வீதியில் அருளிய வாசகங்களை நற்சிந்தனை மூலம் தமது அடியார்களுக்கு அள்ளி வழங்கி

(11ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பெருந்தகையே!

நல்லை நகருருறையும் ஞானபண்டிதா என்றன்
கல்லைநேர் நெஞ்சிளகக் காண்கிலனே— எல்லவரும்
ஏத்துபுகழ்க் கந்தாநின் எல்லையில் அருட்கருணை
பூத்து மிளி ருவதெப் போது?

★ ★ ★ ★ ★ ★

பல்லோரும் ஏத்தும் பரம்பொருளே
பச்சை மாமயிலூர்
சல்லாபனே தமிழ் தந்தவனே
உனைச் சார்ந்தவர்க்கு
உல்லாசனே நல்லை ஊரினிற்
சார்ந்து உறைபவனே
வெல்வேலனே உன்றன் மெய்யருள்
வேண்டி விரைகுவனே

மாறுதலை படைத்த வள்ளலே
உன்றன் வடிவுகண்டு
ஆறுதலை அடைவது என்று கொல்
ஆறுதலை வைத்தவர்க்கும்
தேறுதலைச் செய்யும் செம்பொருள்
தன்னைச் செவிமடுக்கும்
பேறுதனைத் தருவது எப்போது
நல்லூர்ப் பெருந்தகையே:

—மட்டுவில் மு. தம்பையா


நல்லையின் கந்தனுக்குத் திருநாளாம்
அவன் தேரூர்ந்து வரும் பெருநாளாம் இன்று

புத்தம்புதிய மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், ஜெனரேற்றர் வகைகள்,
சோலர் வகைகள், சகல விதமான பற்றறி வகைகள், தரமான அசிட் வகைகள்
என்பனவற்றிற்கு நாடவேண்டிய இடம்

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**


இல. 103, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: இல. 262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

(சி/4549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
நல்லூர் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்




# இடர்களைய வேண்டி வடம் பிடிப்போருக்கு

# அருள் தந்து அபயமளிக்கும் முருகன்!

" வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே "

ஞானிகள் தமது அனுபவத்தால் கண்ட உண்மை இது. நெக்கு நெக்கு உருகுபவர் நெஞ்சிலே புக்கிருந்து அருள் சுரப்பவன் கந்தன். ஞான சக்தியாகிய வேலாயுதம் ஞாலம் முழுவதும் வாழும் மக்களுக்கு நல்லருள் வாரித் தருவது.

அபிஷேகக் கந்தன் எனச் சிறப்பித்து அழைக்கப்படும் நல்லூர்க்கந்தன் அன்பர் தம் அன்பினால் வசப்படுபவன். நல்லூர்க் கந்தனின் கால நேரம் தவறாத ஒழுங்கான பூசைகள் ஆலயத்தின் சக்தியை மேலும் வலுப்பெறச் செய்யும்.

ஆற்றாமையால் அருணகிரிநாதர் மலையில் மீதிருந்து விழுந்த போது தன் தோளிலேயே தாங்கி, அவரது திருப்புகழால் கிறங்கியவன் கந்தப் பெருமான்.

'கந்தன்' என்றால் அன்பினால் கட்டுப்பட்டவன் என்று பொருள். அந்தக் கந்தவேள் இன்று பக்தர்களுக்கு ஆனந்தக் காட்சி தர தேரூர்ந்துவருகிறான். முத்து மணி இரத்தினங்கள் வைத்து இழைத்த அணிகலன்களுடன் மெத்தென்ற கடம்ப மலர் மாலையைத் திருத்தோளில் துவளவிடும் முருகன் தன் அருட்பார்வையை அன்பர் தம் மீது வீச வருகின்றான்.

இடர் களைவான் எனும் நினைவோடு வடம் பிடிக்க வரும் பக்தர்கள் பல்லாயிரம். மனத்தகத்தே பல்வேறு நினைவுகள் இருந்த போதும் முருகனின் திவ்ய தரிசனம் காண வேண்டும் எனினும் நினைவு ஒன்று தான் பக்தர்களிடம் ஒருமித்து நிற்கும். தேரில் அமர்ந்து வர உள்ளத்



தின் உவகையோடு கண்பனிப்பவர் பலர். தன் நாயகியர் இரு மருங்கும் புடைசூழ உலா வரும் காட்சி காண்பவர் மனதைப் புளகாங்கிதம் அடையச் செய்யும்.

மதுரமான தேனிலும், தினை மாவிலும், பாலிலும், பழத்திலும் சுவை காண்பவன் அல்ல முருகப் பெருமான். அடியார்களின் இனிய அன்பிலேதிருப்புகழ் பாடல்களிலே பூரிப்பவன் வேலவன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க குகன் தேரில் வரும்பொழுது பக்தர்கள் தமது கவலைகளை மறந்து முருகனின் திருக்கோலம் கண்வழியே மனத்தே அடைந்து நிறைவு காண்பர்.

வேண்டுவார் வேண்டும் வரம் ஈவான் கண்டாய் என அப்பர் சுவாமிகள் பாடியது போல், நாம் விருப்பத்துடன் தேடிய வரங்களைத் தந்து விடுவான் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கின்றோம். ஐம்பொறிகள் செல்லும் வழியே செல்லவிடாது மனத்தை ஒருநிலைப்படுத்தி முருகனை வழிபட்டால் பாவங்கள் பஸ்பமாகி விடுமன்றோ! சுடச்சுடரும் பொன்போல அன்பர்களுக்கு சோதனைகள் கொடுத்து தன் பாதக் கமலங்களில் சேர்ப்பவன் முருகன்.

'யாமிருக்கப் பயமேன்' என்று அபய மளிக்கும் வேல் எமது துன்பத்தைத் துடைக்கிறது. நம்மைத் தூய்மையாக்குகிறது. நாம் வாழ் வாங்கு வாழ வகை செய்கிறது. நல்லை நகர் நாயகனின் ஞான சக்திவேல் துன்பங்களைத் தொலைக்கிறது.

நாம் மனத்தகத்தே அவனுக்கு ஆசனமிட்டு அன்பினால் அபிஷேகம் செய்து அமுதமான பாடல்களினால் அர்ச்சித்து வணங்கி வந்தால் நம் வினைகளை அவன் ஓடஓட விரட்டி விடுவான்.

இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாயுள்ள முருகனின் பாதார விந்தங்களைப் பணிவோமாக.

கரவையூர்
**மாலினிதேவி**

நல்லூரில் கோயில் கொண்டு குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் அருள் ஆறுதல் தருபவன் ஆறுமுகன். மக்கள் அகத்தே குடிகொண்டுள்ளவன். ஆகையால் குகன் எனவும் அழைக்கப்படுகிறான்.

## ஆடிவரும் ரதம்

தங்கரதம் தங்கரதம் நல்லூர் ரதம்
இள்ளிவரம் அழகுடனே ஆடிவரும் அழகு ரதம்
வள்ளி தெய்வ யானையுடன் வேலவனும் வரும்ரதம்
கொள்ளை யெழில் குமரனவன் கொஞ்சிவரும்
எங்கள் ரதம்
பார்த்த கண்கள் பாவமறும் பாவமவை வேருமறும்
கார்த்திகேய மன்னனுக்கு கண்ணழகு கொள்ளையிடும்
தங்கரதம் சென்றதடம் தர்மமது பூத்ததடம்
எங்கள் குறை தீர்க்கவென கந்தன்விழி சேருமிடம்

—கந்தமுருகேசதாசன்

## தேருலாப் பேருலா

பல்லவி
நல்லையில் கந்தனுக்குத் திரு நாளாம்-இங்கு
நாளெல்லாம் சிந்து தமிழ்ப் பெருநாளாம்
அனுபல்லவி
வல்லவன் முருகனுக்குப் பேருலாவாம்-இன்று
வல்வினைகள் அழிக்கும் தேர் விழாவாம்
சரணம்
தேரினில் நீ வருவாய் தெரியும் பொற்பதம்-உன்னை
நேரினில் தரிசித்தால் புரியும் அற்புதம்
வாரிக்குளித் தவேலும் உடன் வருமே-நல்லூர்
வீதி நிறைந் துபக்தர் நடமிடுவரே.
வள்ளி தெய்வானையுடன் நீ வரும் மாட்சி
சொல்ல முடியாத சொர்க்கத்தின் காட்சி
சொல்லெடுத் தின் தமிழால் பாடநீ சாட்சி
நல்லை முருகா! எம்மைக் கொள்ளாயோ ஆட்சி

கைதையூர் க. நடராசா

முந்தை வினை அறுக்கும் முருகேசனே
பந்தவினை தீர்த்திடையா குமரேசா!

அழகுக்கு அழகூட்டும்
அழகு சாதனப் பொருள்களின் மாடம்

ஜெயா அழகு மாடம்

மொத்த வியாபாரம்: 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சில்லறை வியாபாரம்: 149, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/4568)

நல்லை முருகா நல்லருள் புரிவாய்
கந்தனே, கடம்பா, காத்திடுவாய்
திருப்திகரமான புடைவைத் தெரிவிற்கு

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி/4543)

தங்கரதம் ஏறி வரு முருகா
தரணியினைக் காத்திடு நல்லூரா!
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன!

சாரங்கா நகைமாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இணையகம்)

அருள் முருகன் நகையகம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தலைமையகம்) (சி/4569)

சிவா நகை மாடம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(கிளையகம்)

நல்லூர் அமர்ந்திலங்கு கந்தா!
தேரேறி வந்து அருள்தா கந்தா!
காலத்தால் அழியாத கண்கவர் புடைவை ரகங்களுக்கு



சோபனா ஆடையகம்
16, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

வண்ண நகையுலகத்தில் வளமான நகையனைத்தும்
எண்ணம் போல் தெரிவு செய்திட ஏற்றதோர் நகைப் பூங்கா!

வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, (சி/4947) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துறக்க முடியாது!

யாழ்ப்பாணத்தில் கடந்ததிங்கட்கிழமை வர்த்தகர்கள் உண்ணாவிரதப் போராட்டம் செய்தனர். நேற்று, கடைகளைப்பூட்டி ஹர்த்தால் நடத்தினர்.

வவுனியாவிலும் கடந்த ஞாயிறு தொடக்கம் ஹர்த்தால் நடைபெற்றது. கடைகள் மூடப்பட்டிருந்ததோடு வாகனப் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பித்தன.

எரிபொருள் விநியோகத்துக்குக் கொண்டுவரப்பட்ட கடும் கட்டுப்பாடுகளைக் கண்டித்தும் அவற்றை நீக்கக் கோரியுமே வவுனியாக் ஹர்த்தால் நடைபெற்றது.

வவுனியாவில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள்கள் போய்ச் சேராமல் தடுப்பதற்கென்றே, அரசு, விநியோகத்தில் கடும் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்திருக்கிறது. இதனால் வவுனியா வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. எரிபொருள்களின் விலைகள் மட்டுமன்றி ஏனைய பாவனைப் பொருள்களின் விலைகளும் உயர்ந்தன. போக்குவரத்துச் சேவை மட்டுமன்றி விவசாயத் தேவைகளும் இல்லாமற் போயின. அதாவது அரசின் எரிபொருள் விநியோகக் கட்டுப்பாட்டினால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது பொதுமக்களே.

அரசாங்கத்தின் இந்தக் கட்டுப்பாட்டினால் வன்னி வாழ் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான விவசாய வேலைகள் தொடங்கப்படும் காலம் இது. எரிபொருள்கள் பெருமளவில் தேவைப்படும் காலம்.

எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடு வன்னிப் பிரதேசத்தின் மூன்று விவசாய மாவட்டங்களினதும் நெற்செய்கையைக் கணிசமான அளவில் பாதிக்கும்.

வன்னியில் வாழும் தமிழ் மக்கள் இந்த நாட்டுப் பிரஜைகள் அல்லரா? அவர்களை வேற்று நாட்டவர்களாகவே அரசு கருதுகிறதா?

அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் வன்னிப் பிரதேசத்தின் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டதான முடிவுக்கே இட்டுச் செல்கிறது. அதாவது ஒரே நாட்டுக்குள்ளேயே அதன் ஒரு பகுதியில் வாழும் மக்கள் மீது பொருளாதாரத்தடை விதிப்பது என்பது அவர்களைவேற்று நாட்டாராக்குவதேயாகும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டுமானால் தமிழ்மக்களின் இதயங்களை வெல்ல வேண்டும் என்று அரசுத் தலைவர்கள் அடிக்கடிமறக்காது கூறிவருகிறார்கள். தமிழ் மக்கள் என்று அரசு கருதுவது தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் தமிழர்களை மட்டுந்தானா?

வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தமது சகோதரர்கள், இரத்தத்தின் இரத்தங்கள் என்ற உரிமையை, உறவை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் ஒருபோதும் மறக்கப்போவதில்லை; துறக்கப் போவதில்லை என்பதனை அரசு உணர வேண்டும்.

# வல்லிபுரம் பிரதேசத்தை பாதுகாக்கச் சங்கம்

வடமராட்சி, ஓக. 20

பருத்தித்துறை கற்கோவளம் தொடக்கம் குடத்தனை, மணற்காடு வரையிலான கரையோரப் பகுதிகளையும் அவற்றை அண்டிய பிரதேசங்களையும் உள்ளடக்கி 'வல்லிபுரப் பிரதேச பாதுகாப்புச்சங்கம்' ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புலோலி மெ. மி. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் இப் பிரபிரதேசத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

இச் சங்கம் பின்வரும் திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளது.

★ இப் பிரதேசத்திலுள்ள தனியார் காணிகளில் தென்னை, பனை, சவுக்கு, தேக்கு, கஜு நெற்பயிர் போன்றவற்றைப் பயிரிட்டு உற்பத்தி செய்து பயன் பெறல்.

★ அரச காணிகளில் மண் எடுப்பதைத்தடுப்பதன்மூலம் கடலரிப்பைத் தவிர்த்து எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இடர்களைத் தடுத்தல்.

★ அரச காணிகளில் அனுமதி பெற்று கஜு பயிரை பயிரிட ஊக்குவித்தல்.

★ பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அரச, தனியார் காணிகளில் பனை வளர்க்கவும், பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

★ தனியார் காணிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றுவது முற்று முழுதாகத் தடை செய்யவும் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் காணி உரிமையாளர்களுக்குஉதவி வழங்குதல்.

★ குடி தண்ணீர் உவராக மாறக் கூடிய சூழ் நிலையைத் தடுத்தல்.

★ வல்லிபுர ஆலயச் சூழலில் மண் அகழ்வதன் மூலம் ஆலயத்தின் இராச கோபுரமும் ஏனைய கட்டடங்களும் பாதிப்படையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அயற் கிராமங்கள் கடலில் மூழ்கும் ஆபத்தும் உண்டு. இவற்றைத் தடுக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

இத் திட்டங்கள் தொடர்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆ. சிவசாமியுடன் கலந்துரையாடியுள்ள இக் குழு யாழ். அரச அதிபரையும் இது தொடர்பாகச் சந்தித்து உரையாடவுள்ளது. (ஐ-173)

# வலி. தெற்கு பிரதேசசபை 'பணிகள் கணனி மயம்!

வலிகாமம் தெற்கு, ஓக. 20

வலிகாமம்தெற்கு, பிரதேச சபையின் செயற்பாடுகள் கணனி மயமாக்கப்பட்டுள்ளன.

வேலைகளை கணனி மயப்படுத்தும் சம்பிரதாய பூர்வமானசெயற்பாடுகள் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஓய்வூதியம் பெறுவோருடைய வேலைகளே முதலில் கணனி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டு லட்சம் ரூபா பெறுமதியுள்ள கணனி இயந்திரத்தையும், அதற்கான கட்டடவசதிகளையும் திறைசேரி அண்மையில் வழங்கி இருந்தது. பிரதேச செயலகத்தினரால் கணனியை இயக்குவதற்கான ஜெனரேற்றர் ஒன்று ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-152)

## சாயி சிந்தனை

மனித வாழ்க்கை என்பது என்ன? அதன் இலக்கு, இலட்சியம் என்ன? அதன் தத்துவம் என்ன? என்பவற்றை எந்த மனிதனும் புரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. உணவும், உடையும், வசதியும் தான் மிக முக்கியம் என எண்ணும் மனிதன்; நித்யசத்யமான உண்மையைப் பற்றி, தெய்வீகத்தைப்பற்றி நினைத்துக்கூட பார்ப்பதில்லை. இது தவறு. மனிதவாழ்க்கையின் முக்கிய நோக்கம் உள்ளுறையும் தெய்வீகத்தைத் தானும் உணர்ந்து, சமுதாயத்திடம் அதைப்பகிர்ந்து கொண்டு, தானும் அனுபவித்து ஆனந்திப்பதுதான். அது தான் மனித வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்.

(சனாதன சாரதி: செப்ரெம்பர் – 1997 -).

## தீர்வொன்று தாராய்

வாராய் கந்தா வடிவேலா எம்
  வன்துயர் தீர்த்திடுவாய்
சீராய் மனிதம் சிந்தித் துயர
  சிறப்பருள் பொழிந்திடுவாய்
தேரில் வருவாய் வேலாயுதனே நம்
  தேவை அறிந்திடுவாய்
பாராய் எங்கள் பாரம் நீங்க
  பாலா வடிவேலா
தீராத் துயர்கள் நிகழ்ந்திடும் மண்ணிதிலே
  தீர்வொன்று எமக்குத் தாராய்
போராய்ப் போகும் போக்கினை மாற்றி - இப்
  பொழுதினில் அமைதியைத் தா!

- மானியூர் ரட்ணேஸ்.

## தேர் இழுப்போம் வாருங்கள்!

அழகுத் திருத்தேர் மீதேறி
  அருகாய் வள்ளி தெய்வானை,
பழக ஆறு முகத்தோடும்
  பளிச்சிட் டொளிரும் நகையோடும்,
குழகன் வீதி வலம்வருவான்
  குவையாய் கருணை குவித்திடுவான்,
அளவில் கூடி நல்லூர்த்தேர்
  [illegible] இழுப்போம் வாருங்களே!

— [illegible]

# உருளைக்கிழங்கு பயிரிட தொழில் ஊக்குவிப்பு கடன்

யாழ்ப்பாணம், ஓக. 20

அச்செழுப் பகுதியில உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அதனை ஊக்குவிக்குமுகமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தொழில் ஊக்குவிப்புக்கடன்களை வழங்கியுள்ளது.

இப்பகுதியில் உள்ள சிறந்த உருளைக்கிழங்குச் செய்கையாளர்களில் வறிய விவசாயிகள் 40 பேருக்கு இக்கடனுதவிகளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கியுள்ளது.

சிலருக்கு 10 ஆயிரம் ரூபாவும், சிலருக்கு 7 ஆயிரம் ரூபாவும் ஆகமொத்தம்3லட்சத்து 52 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும் இப் பணம் உருளைக்கிழங்கு அறுவடையின் பின்னர் விவசாயிகளால் மீளச் செயற்படுத்தப்பட வேண்டும்.

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் அ. நல்லதம்பி இக்கடன்களை விவசாயிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் திரு. கேதீஸ்வரன் விவசாய அலுவலர் சௌந்தரராஜா அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்டஅலுவலர் தேவானந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கடனுதவித் திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இது போன்ற மேலும் பல கடன்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# ஆத்மஜோதி ஞாபகார்த்த பாதயாத்திரை

நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவை ஒட்டிய ஆத்மஜோதிஞாபகார்த்த 46 ஆவது பாதயாத்திரை இன்று காலை நல்லூர் கந்தசுவாமி கோவிலை வந்தடையும்.

ஏழாலை இலந்தைக்கட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலயத்திலிருந்து நேற்று பிற்பகல் ஆரம்பமான இப் பாதயாத்திரை குப்பிளான் புன்னாலைக் கட்டுவன் ஊடாக பலாலி — யாழ். பிரதான வீதி வழியாக கோண்டாவில் சந்திப் பிள்ளையார் ஆலயத்தை இரவு வந்தடைந்தது.

அங்கிருந்து இன்று அதிகாலை நல்லூரை வந்தடைந்து தேர் வீதியுலாவுடன் இணைந்து கொள்ளும். (ஐ-173)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம்துர்க்காதேவி மணிமண்டபத்தில்மாலை5.30மணிமுதல் 7 மணிவரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை வீ. சிவஞானசேகரத்தின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

★ ★ ★

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி சி. வை நித்தியானந்த சர்மா முத்துவிநாயகர் ஆலயத்தில் மாலை 5.15 மணிக்கு நிகழ்த்திவரும் தெய்வீக இசைச்சொற்பொழிவில் இன்று வியாழக்கிழமை 'இந்திரசித்து' என்ற தலைப்பில் பிரசங்கம் இடம்பெறவுள்ளது. (ஐ-4-30)

★ ★ ★

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி வடபிராந்திய இந்துப்பேரவையினர் அறுபத்து மூவர் திருமடத்தில் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை நிகழ்த்திவரும் 'மகாபாரத முத்துக்கள்' தொடரில் இன்று வியாழக்கிழமை பிரம்மஸ்ரீ காரை த. சிவராஜ சர்மா 'பாரதயுத்தம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். (ஐ-8-30)

★ ★ ★

நல்லூர்த்திருவிழாவை முன்னிட்டு இன்றுவியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஆதீன மண்டபத்தில் கிருபானந்தவாரியாரின் பிரதம சீடர் நடேசு சிவசண்முகமூர்த்தி வழங்கும் ''முருகன் பெருமை'' எனும் தலைப்பிலான சங்கீதகதா பிரசங்கம் இடம்பெறும். (ஐ-ரீ)

# விவசாய டிப்ளோமா பயிற்சி விரைவில் ஆரம்பம்

வலிகாமம்தெற்கு, ஓக. 20

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் இரண்டு வருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக நிறுவனத்தின் அதிபர் சு. குகதாசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட உள்ளன. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற இப்பயிற்சி நெறி பின்னர் இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

மீளக்குடியமர்வின் பின்னர் நிறுவனத்தின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. தற்போது இந்நிறுவனத்தில் ஓராண்டு கால 4 மாதகால குறுங்கால விவசாய பயிற்சி நெறிகள், விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

1996-97 ஆம் கல்வி ஆண்டுகளில் பயிற்சி பெற்ற ஓராண்டுகால மற்றும் நான்கு மாத, குறுங்கால விவசாயப் பயிற்சி நெறிகளின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் விரைவில் வழங்கப்பட உள்ளதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

## நாளை

ஆவணி - 05

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி முற்பகல் 7.45 வரை

நட்சத்திரம்: ஆயிலியம் முன்இரவு 11.24 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 06.05 07.35

ராகுகாலம்: 10.35 - 11.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதய வாக்கு

இறைவனுடைய கிருபை இல்லாமல் மனிதனால் அறியாமையை வெற்றிகொள்ள முடியாது.

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்லைக் கந்தனின் அருள் யாவருக்கும் கிட்டுவதாக''

**TASTY PRODUCTS**

புதிய மெருகுடன்

★ ஜாம் ★ நெல்லிரசம் ★ கோடியல்
★ சேர்ஸ் ★ ஊறுகாய்

என்பன

யாழ். குடாநாடு பூராகவும் கிடைக்கும்.

உங்களிடம் உள்ள திருகு மூடியுள்ள ஜாம் வெற்றுப் போத்தல்களை எம்மிடம் ஒப்படைத்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

TASTY - சுவையின் மகாராஜன்

ரேஸ்ரிலைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிடெட்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (58448)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 18 — 07 — 1947

உதிர்வு 04 — 09 — 1994

அமரர்

**இரத்தினகோபால் தியாகரத்தினம்**


(தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், செங்கலடி)

நான்காண்டு சென்றதையா மாறவில்லை
உன்நினைவு
நாமிங்கு படுந்துயரை நானிலத்தே யாரறிவர்?
இரத்தினத்தின் கண்மணியே தியாக ரத்தினமே
எத்தினமும் உனை மறவோம் யாமே!
கண்மணியே உன்னைக் காணாது ஏங்குகிறோம்
மண்தனிலே உந்தன் மலர்வதனங் காண்பதற்கு
வெண்ணிலவே எங்கள் குடும்பத்து ஒளிவிளக்கே
உன்பிரிவால் வாடுகின்றோம் ஓயாது நாமிங்கே!

பிரிவால் துயருறும்
தாய், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

398/2, நொத்தாரிஸ் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம். (53830)

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு 21 — 03 — 1979

இறப்பு 21 — 03 — 1997

**அருளம்பலம் ஐங்கரன்**

திதி: 20-08-98

பாசத்தின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
விளங்கிய எங்கள் ஆருயிர்ச் செல்வனே!
வீட்டினை விட்டு வெளியூர் சென்றிட வேலூர்
சென்றாய்?
காலனவன் வந்து உன்னுயிரை ஒரு நொடியில்
பறித்தானே!
நீங்காத உன் நினைவுகள் நீராய் உறுத்துகின்றதே!
ஆண்டொன்றல்ல பலகோடி சென்றாலும்
உன் நினைவுகள் எம்உள்ளமதை விட்டு நீங்காதே.

உன் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

தம்பகாமம்,
பளை. (58327)

## கைது

வலி. வடக்கு ஓக. 20

கோண்டாவில் மேற்கு, இணுவில் ஆகிய இடங்களில் கசிப்பு விற்பனை, உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கசிப்பு உபகரணங்களுடன் வீதிவழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர்.

கூடி நின்ற பொது மக்கள் முன்னிலையில் கசிப்பு ஊற்றி அழிக்கப்பட்டது. (இ-86)

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக. 20

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு பிரமாண அடிப்படையில் மூலதன நிதி 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதியில் கட்டுடை வடலியடைப்பு பகுதிகளிலுள்ள மதகுகளும், பாடசாலை மலசலகூடங்களும் திருத்தம் செய்யப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச சபை அதிகாரி தெரிவித்தார். (இ-15)

## மருந்து விநியோகம்

வடமராட்சி, ஓக. 20

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் தட்டுப்பாடான மருந்து வகைகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை தனியார் கடைகளில் கொள்வனவு செய்து நோயாளர்களுக்கு வழங்கிவருகிறது.

அபிவிருத்திச்சபை வைத்தியசாலையில் நிலவும் தட்டுப்பாடான மருந்து வகைகளின் விவரத்தைப்பெற்று அவற்றைத் தனியார் கடைகளில் கொள்வனவு செய்து வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது. (ஐ-173)

## பஜனை பாத யாத்திரை

அரியாலை, ஓக. 20

நல்லூர்க்கந்தன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு கொழும்புத் துறையில் இருந்து விசேட பஜனைப் பாத யாத்திரை இன்று நடைபெறவுள்ளது.

பாண்டியன் தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து இன்று காலை 6 மணிக்கு பரமானந்த சுவாமிகள் தலைமையில் இந்த பஜனை யாத்திரை நல்லூர் ஆலயத்தைச் சென்றடையும். (ஐ-17)

## மைதானத்தில் மிதிவெடி மீட்பு

ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் இருந்த மிதிவெடி ஒன்று இராணுவத்தினரின் உதவியுடன் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் அகற்றப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இந்த விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்த போதும் மிதிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது. (ஐ-17)


## நால்வர் பொலீஸாரிடம் ஒப்படைப்பு

வடமராட்சி, ஓக. 20

பருத்தித்துறைப் பகுதியில் நடைபெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக நால்வர் பருத்தித்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக புளொட் அமைப்பின் பருத்தித்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார். (ஐ-173)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையகம் 12 — 04 — 1959

விண்ணுலகம் 20 — 08 — 1990

செல்வன்

**இராசரத்தின தவராசா**

(பாலன்)

(கேணியடி குப்பிளானைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
உன் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வம் இருந்தென்ன
உன் பால் முகம் பார்த்தால் போதாதோ!
ஆனதோ அறுதிங்கள் பாசமோ மாறாது
உன் புன்சிரிப்பு மறையாது
மீளாத் துயில் கொண்ட எங்கள்
பாசப் பெருவிளக்கே!

உன் ஆத்மா சாந்தியடைய கேணியடி வைரவர் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பித்து ஆறுதல் அடைகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணா,
சகோதரிகள் (கனடா)
உற்றார், உறவினர்.

இ. துரைராசா (அத்தான்),
ஏழு கோயிலடி, ஏழாலை. (58482)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**வைரமுத்து மார்க்கண்டு**

(ஞானாசாரியார் வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி.)

தாயின் மடியில்: 1936—06—17

இறைவன் அடியில்: 1998—07—21

திதி: 20 — 08 — 1998

தீராத நோய் வந்து தீண்டியதோ உமது உடலை
ஆராத அன்புருவக் குல விளக்கே! ஆற்றாது மனம்
நொந்தோம்—ஐயா
பாசத்துடன் எம்மை வளர்த்து பல்கலையும் பயிற்று
வித்தீர்
பாங்குடனே வாழவைத்த பரிவு மிக்க ஐயாவே!
அன்பொழுகும் உள்ளமுடன் அரவணைத்து எம்மை
யெல்லாம்
இன்பமுறச் செய்த எம் அன்பு ஐயாவே!
எம்மை எல்லாம் ஏங்க விட்டு எங்குதான் சென்றீரோ?
மாதம் ஒன்று உருண்டாலும் — ஐயா
எம் பாசம் தான் மாறுமா?
உங்கள் உருவம் தான் எம்மை விட்டு அகலுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: Mr. S. SELVA MOHAN (மருமகன்)
FELD STR-22,
32257 BUNDEI,
GERMANY.
[ T/P: 05223-17088 ] (58374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஸ் அன்டெனா தொழில் நுட்பத்தில்
குடாநாட்டில் முன்னோடிகள்

## புதிய தொகுதி DISH ANTENNA விற்பனைக்கு

DISH ANTENNA வின் உதிரிப்பாகங்களை தனித்தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 8 அடி & DISH ANTENNA | - 14,000.00 |
| RECEIVER | - 10,000.00 |
| L. N. B. | - 3,000.00 |
| FEED HORN | - 1,200.00 |

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட CHANNEL களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களியுங்கள். எமது காட்சியறையில் செய்முறை விளக்கத்தைக் கண்டு உங்கள் வீட்டிலும் பூட்டி மகிழுங்கள்.

மற்றும்

SONY T. V, G 21, G 14, 2197, 2199 போன்ற புதியரகத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் SONY, PANASONIC போன்ற ரகங்களின் வீடியோ, டெக்குகளும் மற்றும் பல்வேறு வகை RADIOக்கள், மின்சார உபகரணங்கள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும் நாட வேண்டிய இடம்:

**ARUN VIDEO MOVIE**
MAIN STREET,
NELLIADY.

(58510)

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

மருதனார்மடம்-சுன்னாகம்

இவ்வாச்சிரமத்தின் 59 ஆவது ஆண்டு விழா இம் மாதம் [21-08-98] முழுநாள் நிகழ்வாக நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

காலை 7-30 மணி-தூயநற்கருணை ஆராதனை
காலை 9-30 மணி-தோத்திர ஆராதனை
காலை 11-00 மணி-கலந்துரையாடல்
மதியம் 12-00 மணி-பரிந்து வேண்டுதல்
மாலை 3-00 மணி-பகிரங்கக் கூட்டம்

அன்பர்கள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

அருள்திரு சேவக் சாமுவேல் தேவரத்தினம்
அல்பிறட்
(சாம் அண்ணா)

(58513)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திரு. மு. முரளீதரன் அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி நாகம்மா முருகேசு**

அவர்கள் இறைபதமடைந்தமைக்காக எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.
யா/ ஸ்ரீசோமஸ் கந்தாக் கல்லூரி,
புத்தூர்

(58515)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை அமைப்பின் தலைவரும், சமாதான நீதிவானும், சங்கானை அஞ்சல் அலுவலகத் தேவைகளில் முன்னின்று உதவியவருமாகிய

**ஜொன்னையா கனகரத்தினம் J.P. (நிம்மதி)**

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தபால் அதிபரும், சக ஊழியர்களும்,
தபால் அலுவலகம், சங்கானை.

(58520)

## தெய்வீக கலை நிகழ்ச்சி

வடமராட்சி, ஓக. 20

பிரசித்திபெற்ற தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் தெய்வீகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

மஹோற்சவ தினங்களான இம் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் தெய்வீக கலை நிகழ்ச்சிகளில் சொற்பொழிவும், இன்னிசை, மெல்லிசை, பஜனை, பக்திப் பாடல்கள், பண்ணிசை, வில்லிசை என்பனவும் இடம் பெறும். (ஐ-173)

## நல்லூர்த்...

(ஏழாம் பக்கத் தொடர்)

னார். குருவிற்குள்ளே தானிருக்கும் எழிலைக் கண்டார்.

மார்க்கண்டு சுவாமிகள்

செல்லப்பரைப் போலவே யோகசுவாமிகளும் நல்லூரானையே போற்றிப் புகழ்ந்து வணங்குமாறு தம்மை நாடி வந்த அடியவர்களுக்கு நல்வழி காட்டினார்.

யோகர் சுவாமிகள் தமது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ''கடவுளைத் தேடி கதிர்காமத்துக்கும், சிதம்பரத்துக்கும் ஓடாதே'' என்று கூறி மார்க்கண்டு சுவாமிகளின் உடம்பைக் காட்டி இது தான் தேர்; இது தான் நல்லூர்'' என்று உபதேசித்தார்.

தலயாத்திரை செய்ய வேண்டாமென மார்க்கண்டு சுவாமிகட்கு கூறிய போதும் நல்லூரான் தேரைத் தரிசிக்குமாறு யோகர் சுவாமிகள் கூறியுள்ளார்கள். அப்பொழுது கைதடியில் மார்க்கண்டு சுவாமிகளுடன் வசித்த சோல்பரிப்பிரபுவின் மகன் சந்தசுவாமிக்கும் நல்லூரான் தேரைத் தரிசிக்குமாறு கூறினார்.

சோல்பரிப்பிரபுவின் மகன் யோகர் சுவாமியைக் கடவுளாகவே கண்டவர். ஒரு முறை அவரிடம் சிவதொண்டன் மலருக்கு ஒரு கட்டுரை கேட்டபோது ''தன்னொப்பரில்லாத தலைவனை எழுதிக் காட்டிட என்னாலிசையுமோ'' என தமிழில் யோக சுவாமிகளைப் பற்றி எழுதியுள்ளார்.

அக்பர் என்ற நீதிவானும் அமெரிக்க துறவி சுப்பிரமுனியாவும் நல்லூரானை வணங்கச் சென்ற போது கருவறையில் யோகர் சுவாமிகள் வீற்றிருப்பதைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனார்கள்.

ஒரு முறை நல்லூர் தேரின்று அங்கப் பிரதட்டை செய்து மேல் முழுவதும் மண்ணுடன் நவரத்தினம் என்னும் சிவதொண்டன் அடியார் யோகர் சுவாமிகளைத் தரிசிக்க கொழும்புத் துறை ஆச்சிரமத்திற்குச் சென்ற போது உள்ளே வர விடாமல் ''டேய் உன்மேல் முழுவதும் நல்லூர் மண்ணடா, போடா போய் கோயில் வீதியில் தட்டிப் போட்டு வா'' என ஏசிக் கலைத்தார். அத்துணை புனிதம் வாய்ந்தது நல்லூர் மண். சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும், சாதுக்களும் அருந்தவமியற்றிய நல்லூர் வீதியில் நாம் ஒருக்கால் விழுந்து கும்பிட்டால் எமது வில்லங்கம் எல்லாம் ஓடிப்போமென யோகர் சுவாமிகள் பாடியுள்ளார்கள்.

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சாமல் நல்லூரான் திருவடியே தஞ்சமென இன்றைய தேர்த்திருவிழாவன்று அவன் தான் [illegible] வழி காட்டுமாறு வணங்குவோமாக.

★

## கடந்த மாதம் 57 பேருக்கு தொலைபேசி இணைப்பு

### விவரம் மக்கள் பார்வைக்கு

நவாலி, ஓக. 20

தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபைக்கு விண்ணப்பம் செய்தவர்களில் கடந்த மாதம் மட்டும் 57 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் பெயர் விவரங்கள் யாழ். செயலகத்திலும், 'ரெலிக்கொம்' நிறுவனத்திலும், இணைப்பு அலுவலகத்திலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## அருள் வழங்கும்...

(ஆறாம் பக்கத் தொடர்)

கொடுப்பவன். அவ்வுலகில் அழியாத வீடும்தரக் கடவன் என்று அம்புலிக்குக் கூறுவது போல எமக்குக் கூறி வழிப்படுத்துகிறார் பக்தர் ஒருவர்.

எண்ணியதை முடிக்கும் சிறப்பு முருகப்பெருமானின் முதன்மைச் சிறப்பாகும். இதனாற்றான் 'முன்னியதுமுடித்தலின் முருகொத்தீயே' எனப்பாடி, அரசன் ஒருவனைப் போற்றுகிறார் நக்கீரர். தேவர்களின் பகை நீக்கி, பிரமனின் கர்வம் போக்கி, அருணகிரியின் பழி நீக்கி, குமரகுருபரனின் மூங்கை நீக்கி, பகழிக்கூத்தரின் வயிற்றுவலி நீக்கி அருள் கொடுத்த வள்ளல் எம் முருகன்.

சங்க இலக்கியம் முப்பத்தாறில் முதலிலக்கியம் திருமுருகாற்றுப்படை, அதன் கதாநாயகன் முருகன். தமிழ் மக்களின் முதற்றரமான பக்திக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ''சேயோன்'' என்று முருகனைக் குறிப்பிடுகிறது. எனவே மிகப்பழம் பெருமை வாய்ந்த வழிபாடு முருகவழிபாடே என்பதில் மிகையொன்றுமில்லை. ஆகவே இந்நாள்களில் நல்லைக்கந்தன் திருவடிகளை வாழ்த்தி வாழ்வு பெறுவோமாக.

★

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு
## பிரதம குரு தேவை

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்கு பிரதமகுரு தேவைப்படுகின்றார்.

தகுதியுடைய அந்தணர் 24-08-98 திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவு செய்யப்படுபவர் நம் ஆலயம் ஒழுங்கு செய்யும் வீட்டிலேயே வசிக்கவேண்டும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

- செயலாளர்
பரிபாலனசபை

(சி/4616)

## பொருள்கள் ஏற்றுதற்கான கப்பல் சேவை

கொழும்பில் இருந்து 'மாஹேரா' கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவரவிரும்பும் வர்த்தகர்கள் தமது விண்ணப்பத்தினை 21—08—1998 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு முன் எமது காரியாலயத்தில் கையளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தை சார்ந்த ஏனைய வணிகர் சங்க உறுப்பினர்கள் தமது சங்கத்தின் சிபார்சுடன் விண்ணப்பத்தை எமக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

கப்பல் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். பொருள்களை உரியகாலத்தில் துறைமுகத்துக்குக் கொண்டு சென்று கப்பலில் ஏற்றுவதற்கு ஒழுங்கு செய்யத்தவறின் அந்தத் தாமதத்திற்கான குற்றப்பணம் அறவிடப்படும்.

கப்பலில் அனுப்பப்படும் சகல பொருள்களிலும் அல்லது பொதிகளிலும் தெளிவான குறியீடுகள் இடப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி/4615)

## கண்ணீர் அஞ்சலி

இறைபதம் எய்திய
உயர்மிகு
**A. T. S. இரத்தினசிங்கம்** (லண்டன்)

இப் பெரியாரின் அகால மரணச் செய்தியைப் பத்திரிகை மூலம் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

1994 ஆம் ஆண்டில் எமது ஆலய பரிவார மூர்த்திகளிலொன்றான வைரவப் பெருமானுக்கு ஓர் ஆலயம் அமைத்துத்தந்து இந்தியா, மாமல்லபுரத்தில் இருந்து வைரவப் பெருமான் விக்கிரகம் செய்வித்து எமக்கு அனுப்பி வைத்து கும்பாபிஷேகம் அனைத்தையும் தமது பொறுப்பிலேயே செய்து வைத்த பெரும் இறைதொண்டை இவ்வேளையில் நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து இறைவனடிசேர கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- பரிபாலன சபை
கொல்லங்கிராய்
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/4614)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு -- கிழக்குப் பகுதிகளில்

# சனிக்கிழமைகளில் பாடசாலை ஏன்?

## டிவகலாலா மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 20

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் சனிக்கிழமைகளில் பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா விடுத்த உத்தரவுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலர் விடுத்துள்ள இந்த உத்தரவுக்கு அகில இலங்கை ஐக்கியஆசிரியர்கள் சங்கம் (A. C. U. T. U.) கடும் ஆட்சேபமும் எதிர்ப்பும்தெரிவித்துள்ளது.

இச் சங்கத்தின் தலைவர் வண. ஜல்வெல பன்னாசேகர தேரர் இது சம்பந்தமாக தெரிவித்ததாவது:

சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்த வேண்டும் என்ற உத்தரவு வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களின் உரிமைகளை மீறும் செயல்; இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளில் அரசாங்கப் பரீட்சைகள் நடத்தியதன் காரணமாக இழக்கப்பட்ட பாடசாலை நாள்களை ஈடு செய்வதற்காக சனிக்கிழமைகளில் பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்றும் —

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் செயலாளர் அப்பிரதேசத்தில் உள்ள கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் வேறெந்த மாகாணத்திலும் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

இப்படி அவர்கூறினார்.

(அ-6)

## மெய்வன்மை, கரப்பந்தாட்டம் பற்றிய கருத்துரைகள் இவ்வாரம்

யாழ்ப்பாணம், ஒக. 20

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சம்மேளனம் நடத்தி வரும் விளையாட்டு சட்ட விதிகள் தொடர்பானகருத்தரங்குத் தொடரில் இவ்வார இறுதியில் மெய்வன்மை, கரப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்பட உள்ளன.

மெய்வன்மை போட்டிகள் தொடர்பாக யாழ். மாவட்ட அமைச்சூர் மெய்வன்மை சங்கப் பிரதிநிதிகளும் — கரப்பந்தாட்ட விதிகள் தொடர்பாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க பிரதிப் நிதிகளும் கருத்துரைகளை வழங்க உள்ளனர்.

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் பணிமனையின் கலந்துரையாடல் மண்டபத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10. 30 மணி முதல் இந்த கருத்தரங்குத்தொடர் நடைபெற உள்ளது.

### கப்பல் தகர்ப்பினால்

# வடமராட்சி வர்த்தகருக்கு ரூபா 2கோடி இழப்பு

வடமராட்சி, ஒக. 20

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்து ''பிரின்ஸஸ் காஷ்' கப்பல் பொருள்களுடன் அழிக்கப்பட்டதால் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு சுமார் இரண்டு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 12 வர்த்தர்கள் இக்கப்பலில் பொருள்களை ஏற்றி இருந்தனர்.

(ஐ-173)

## கலை விழா நடத்த ஏற்பாடு

பருத்தித்துறை, ஒக. 20

கோப்பாய் கல்விக் கோட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை விழா அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது. இருதினங்கள் நடைபெறவுள்ள இக் கலை விழா கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிலும், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. கோப்பாய் கல்விக் கோட்ட அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நடத்தும் இக் கலை விழா மூலம் திரட்டப்படும் நிதி கோப்பாய் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-118)

## மதகுகள் புனரமைப்பு

பருத்தித்துறை, ஒக. 20

பருத்தித்துறை— யாழ்ப்பாண வீதியிலுள்ள கிராமக்கோடு, சாரையடி மதகுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாதிருந்த இந்த மதகுகள் கடந்த சில வருடங்களாக மிக மோசமான நிலையில் இருந்தன. இந்த மதகுகள் புனரமைக்கப்பட்டு வருவதால் அவற்றின் அருகில் தற்காலிக பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-118)

### பொது...

(முதலாம் பக்கத் தொடர்)

இப் பரீட்சார்த்த மின்விநியோகத்தின் போது காங்கேசன்துறையிலிருந்து சுன்னாகம் வரையும்—

சுன்னாகத்திலிருந்து பரமேஸ்வராக் கல்லூரி வரையும்—

சுன்னாகத்திலிருந்து கந்தரோடை சங்கானை ஊடாக பொன்னாலை வரையும்—

சுன்னாகத்திலிருந்து காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் வீதியில் யாழ்ப்பாணம் வரையும்—

பரமேஸ்வராக் கல்லூரியில் இருந்து பலாலி வீதி வழியாக யாழ். மின்சார நிலையம் வரையிலும்—

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து கல்வியங்காடு வரையும்—

பரமேஸ்வராக் கல்லூரியிலிருந்து பிறவுண் வீதி, அரசடி வீதி, கே. கே. எஸ் வீதி ஊடாக மனோகரா தியேட்டர் வரையும்—உள்ள உயர் அமுக்க மின் மார்க்கங்களிலும் அதனை அண்டிய தாழ் அமுக்க மின் மார்க்கங்களிலும் மின்சாரம் செலுத்திப் பார்க்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-6-5)

### நல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-7)

### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் இருவரும் ஏற்றப்பட இருந்தனர். எனினும் விசாரணைகள் முடிவடைய தாமதமானதால் இந்த விமானம் காத்திருந்து பிற்பகல் 5-15 மணியளவில் இரு மாலுமிகளையும் ஏற்றிக் கொண்டு சென்னை நோக்கிச் சென்றது.

(இ-6-3-9-21)

## கோழி வளர்ப்பில் ஆர்வம் அதிகம்

யாழ். மாவட்டத்தில் கோழி வளர்ப்பு குடிசைக் கைத்தொழிலாக மாறியுள்ளது.

இடம் பெயர்ந்தோர் வாழும் தனியார் வீடுகளில் கோழிகள் பெருமளவுகளில் வளர்க்கப்படுகின்றன (இ-30)

### எச்சரிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

தீ ஏற்படவில்லை என்பது பின்னர் தெரியவந்தது. எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டதன் காரணமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

எச்சரிக்கை மணி அடித்தது பாரதூரமான குற்றம் என்றும் அது குறித்து உடனடியாக விசாரணை செய்து அதற்குப் பொறுப்பானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறினார்.

எச்சரிக்கை மணி அடிக்கப்பட்ட சம்பவத்தில் நாசவேலை ஏதாவது இருக்குமா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

(இ-6)

### மேலும் ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆசிரியர்களை நியமிக்கும் பணி தற்சமயம் நடைபெற்று வருகின்றது. நியமனம் வழங்கப்பட்டவர்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இன்னமும் பதவி ஏற்கவில்லை. அவர்களுக்கு இன்னும் ஒரு மாத காலத்தவணை வழங்க இருக்கின்றோம்.

இவ்வாறு நியமனக் கடிதம் பெறாதவர்களின் விவரங்களையும் இதுவரை நியமனம் பெறாதவர்களின் விவரங்களையும் பெற்று அடுத்த 3 மாதத்துக்கும் 6 மாதத்துக்கும் இடையில் பெரும்பாலும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் — மேலும் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும். இது தொடர்பாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளோம்.

ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அனுமதி கிடைத்ததும் நியமனம் வழங்குவதற்கான பணி ஆரம்பமாகும்—

இப்படி அவர் கூறினார்.

மாகாண அமைச்சிலுள்ள அதிகாரிகள் விடயம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் "அவை தொடர்பான விவரங்களை ஜனாதிபதிக்கு ஏற்கனவே அனுப்பிவிட்டேன். ஜனாதிபதி இந்த விடயத்தில் பெரும் அக்கறையாக இருக்கிறார். விரைவில் அவரது பதில் கிடைக்கும். அந்தப்பதிலுக்காக நான் காத்திருக்கிறேன்" என்றார்.

மாகாணசபை நிர்வாகத்தில் அரசியல் கலக்கக்கூடாது என்றும், மக்களுக்கு பயன் அளிக்கும் விடயங்களையே செய்ய வேண்டும் என்றும் மாகாண சபை அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். மக்களுக்கு தேவையான பணியை—அவர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய பணியை—செய்ய முடியாத அதிகாரிகள் வேறு இடங்களுக்குச் சென்று விடவேண்டியதுதானே.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

### நகரில் கடை..

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டது.

யாழ். வணிகர் கழகம் கடை அடைப்புக்கான அழைப்பை விடுத்தது.

நகரப்பகுதியிலுள்ள பெரும்பாலான கடைகள் நேற்று முழுநாளும் மூடப்பட்டிருந்தபோதும் அத்தியாவசிய விற்பனை நிலையங்களான தேநீர்ச்சாலைகள், உணவு நிலையங்கள், மருந்துக் கடைகள் திறந்திருந்தன.

வர்த்தக நிறுவனங்கள் பூட்டப்பட்டிருந்தபோதும் போக்குவரத்து உட்பட ஏனைய சேவைகள் வழமைபோல் இடம்பெற்றன.

அமைதியான முறையில் இடம்பெற்ற இந்த ஹர்த்தாலுக்கு யாழ். நகர வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். யாழ். நகைக் கடைகளும் மாலை வரை பூட்டப்பட்டிருந்தன.

நேற்றைய கடையடைப்பினால் யாழ். நகரப் பகுதியில் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

(இ-139-15-5)

யாழ்ப்பாண மக்களே!

**அமெரிக்கப் பிரசையாக அரியதோர் சந்தர்ப்பம்!**

வருடா வருடம் லொத்தர்முறை மூலம்
அமெரிக்க அரசு வழங்கும்
விசாவைப் பெற்றுக்கொள்ள
இன்றே விரையுங்கள்.

விண்ணப்பப்படிவங்கள் சகல புத்தக விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

V. லிங்கேஸ்வரன்
92, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.

(58518)

எமது
புதிய வெளியீடு!

விஜய் = சங்கவி நடித்த
நிலாவே வா

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்,
(சி/4618)

**மொனரா எயார்**

மொனரா எயார் விமானம் மூலம் கொழும்பில் இருந்து இருவழி பயணச் சீட்டுடன் யாழ்ப்பாணம் வந்துள்ள பயணிகள் அவசர பயணம் மேற்கொள்ள விரும்பின் நாளை வெள்ளிக்கிழமை காலை பயண ஒழுங்குடன் யாழ். புகையிரத நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**மொனரா எயார்**
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4619)

தங்க மயிலமர்ந்து தேரேறிவரும் நல்லூரானே தமிழர் துயர் துடையுமையா!

**குளிர்பானங்களா? ஐஸ்கிறீம் வகைகளா?? சிற்றுண்டி வகைகளா???**

இன்னும் என்னென்ன வேண்டும் அத்தனைக்கும் தன்னிகரில்லா ஸ்தாபனம்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.